விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு
Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 21 ஞாயிற்றுக்கிழமை (06.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

# இலங்கையுடன் அணுத் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ள இந்தியா இணக்கம்!

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தகவல்



(கொழும்பு)

இலங்கையுடன் தனது அணுத்தொழில் நுட்பத்தை பகிர்ந்துகொள்வதற்கு இந்தியா முன்வந்திருப்பதாக விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கின்றார். தோரியத்தை பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தி மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கே இந்தத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் எனவும் அமைச்சர் அறிவித்திருக்கின்றார். (14ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் தன்மையை சனல்-4 வீடியோ கொண்டுள்ளது

### ஜோன் ஹோம்ஸ் தெரிவிப்பு

(லண்டன்)

சில நிராயுதபாணிகளை இலங்கைப் படையினர் சுட்டுக்கொன்றதாக காட்டப்பட்ட வீடியோவை தான் பார்வை யிட்டதாகவும் அது மிகவும் கவலை யளிப்பதாக இருப்ப தாகவும் குறிப்பிட்டுள்ள ஐ.நா.வின் மனிதா பிமான விவகாரங்களிற்கான துணைப்பொதுச் செயலர் ஜோன் ஹோம்ஸ் அது அரசும் விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களின் தன்மையை ஒத்ததாக காணப்பட்டதாக கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்தசமரசிங்க ஐ.நா.செயலர் பான் கீ மூனை அண்மையில் சந்தித்துப் பேசியுள்ளார். இச் சந்திப்பில் இவர்கள் எவ்விடயங்கள் தொடர்பாக பேசினர் என்பது தொடர்பாக ஜோன் ஹோம்சை பி.பி.சி.கேட்ட போதே அவர் இவ்வாறு (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-யாழ். பஸ் பயணம்

## டோக்கன் பெற இரவு 10 மணிமுதல் பயணிகள் காத்திருக்கும் பரிதாபம்!

(வவுனியா)

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏ-9 வீதிவழியாக பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்வதற்கான இராணுவத்தினரின் அனுமதியைப் பெறுவதற்காக முதல் நாள் இரவு 10 மணிக்கே பயணிகள் டோக்கன் பெறுவதற்காக கியூவில் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து தினசரி சுமார் 10 பஸ் வண்டிகள் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கும், கோத்தபாயவுக்கும் கௌரவ கலாநிதிப் பட்டம்!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் கொழும்புப் பல்கலைக்கழகம் கௌரவ கலா நிதிப்பட்டம் வழங்கவுள்ளது.

பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தலைவர்களுக்கான கலாநிதி பட்டமும் வழங்கப்படும் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் நிகழ்வில் ஜனாதிபதி முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார் என மட்டும் ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தியது. அண்மையில் நடந்த பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கும் பாது காப்புச் செயலாளருக்கும் கௌரவ கலாநிதி பட்டம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. (ச-5)

## விமான நிலையததுல தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

வெளிநாடுசெல்வதற்காகவிமான நிலையத்தில் இருந்த ஒருவரை பயங்கரவாத புலனாய்வு துறையினர் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் சுந்தரலிங்கம் ஜேசுதாசன் என்ற மட்டக்களப்பை சேர்ந்தவர் எனவும் போலியான தகவல்களுடன் அவர் வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச் செல்ல முற்படு கையிலேயே கைதானதா கவும் தெரிவித்துள்ளனர். (ச-5)

## சனல்-4 வீடியோக் காட்சிகள் போலியானவை என்கிறார் எரிக்



### சொல்கிறார் கோத்தபாய

(கொழும்பு)

சனல்-4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட காட்சிகள் போலியானவை என்பதனை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், முன்னாள் இலங்கை சமாதான ஏற் பாட்டாளருமான எரிக் சொல் ஹெய்ம் ஒப்புக் கொண்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பாக உடனே விசனம்தெரிவித்த (14ஆம் பக்கம் பார்க்க)



## உரிமை கோரப்படாத கணக்குகளை அபகரிக்க மத்திய வங்கி திட்டம்!

(கொழும்பு)

வங்கிகளில் கடந்த பத்து வருடகாலப் பகுதிக்குள் முறையாகப் பராமரிக்கப்படாத மற்றும் கைவிடப்பட்ட வங்கிக் கணக்குகளை அபகரிக்கவிருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி அரசாங்கம் மற்றும் தனியார் வங்கிகளில் கடந்த 10 வருடங்களாக முறையாக பராமரிக்கப்படாத வங்கி கணக்குகள் தொடர்பில் ஆராயவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கை பொதுமக்களின் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகளை அபகரிக்கும் முயற்சி (14ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. ஒரு பெரிய தலைவர் அல்ல அவரிடமுள்ள தகவல்கள் குறைவானது!

### பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தகவல்

(கொழும்பு)

ஊடகங்களினால் சித்திரிக்கப்பட்டதைப் போல் விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான கே.பி. என்ற குமரன் பத்மநாதன் ஒரு பெரிய தலைவர் அல்ல எனவும் அவர் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் அறிந்திருக்கும் தகவல்கள் வரையறையானவை எனவும் இலங்கை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் புலனாய்வுத் துறையின் ஒருங்கிணைந்த குழுவினால் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே ஆகஸ்ட் 6 ஆம் திகதி குமரன் பத்மநாதன் கைது செய்யுப்பட்டதாக ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்திகள் முற்றிலும் பொய்யானது என இலங்கை புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட அதிகாரியான அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் விசேட குழு அதிகாரிகளே கே.பி.யைக் கைது செய்து பாங்கொக் விமான நிலையத்தில் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினிடம் ஒப்படைத்துள்ளார். கைது செய்யப்பட்ட கே.பி. தற்போது தேசிய புலனாய்வுப்பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹேந்தா விதாரணவின் மேற்பார்வையில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். (ச-5)

## தினமும் 40 பாரவூர்திகளில் யாழ்ப்பாணத்திற்குப் பொருட்கள்

### எடுத்துவரப்படுவதாக அரசஅதிபர் தகவல்


(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதை யூடாக தினமும் 40 பாரவூர்திகளில் யாழ்ப்பாணத்துக்கு பொருட்கள் எடுத்து வரப்படுகின்றன. இவற்றில் கணிசமான பொருட்கள் கொழும்பு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கான பொருட்களின் விநியோகம் தொடர்பாக அரச அதிபர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஏ-9 பாதையூடான பொருட்களை விநியோகிப்பதற்கு என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் கொழும்பில் பதிவு செய்யப்பட்ட 854 (14ஆம் பக்கம் பார்க்க)





யாழ்.பல்கலைக் கழக சுக நல நிலையத்தில் சுதேச மருத்துவப் பிரிவு ஆரம்ப நிகழ்வில் ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் திருமதி ரமணி மருத்துவ நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் துணை வேந்தர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# திசநாயகத்தை விடுவிக்குமாறு சென்னை ஊடகவியலாளர் கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜே.எஸ்.திசநாயகம் பயங்கரவாத தடைச் சட்டத்தை மீறினார் என்ற குற்றத்திற்காக கொழும்பு உயர் நீதிமன்றம் அவருக்கு வழங்கிய 20 வருட கடூழிய சிறை தண்டனையை தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இல்லாது செய்ய வேண்டும் என சென்னை ஊடகவியலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய சென்னை ஊடகவியலாளர் சங்கம் அதனை சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்திடம் கையளித்துள்ளது.

ஊடகவியலாளருக்கு வழங்கப்பட்ட சிறை தண்டனைத் தீர்ப்பை மீறுவதற்கானதோ அல்லது இல்லாது செய்வதற்கானதோ அதிகாரத்தை இலங்கை அரசுக்கு அந்நாட்டுச் சட்டங்கள் வழங்கவில்லை எனத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் ஆர்.மோகன் இதில் ஜனாதிபதி தலையிட வேண்டும் என்றும் கூறினார்.

அதேநேரம் தீர்ப்பை எதிர்த்து திசநாயகம் மேன்முறையீடு செய்யும் வரையில் அவரை பிணையில் விடுவிப்பதற்கு அரசு தேவையான அனுசரணைகளை வழங்க வேண்டும் என்றும் பிரதித் தூதுவரிடம் சென்னை ஊடகவியலாளர் சங்கம் கோரியுள்ளது.

தமிழர்களுடனான கருத்து இணக்கத்தை ஏற்படுத்துவதிலும் அவர்களின் வீடுகளை மீள கட்டி எழுப்புவதிலும் தான் உறுதியாக இருக்கிறார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த வாக்குறுதியை நினைவுபடுத்தியுள்ளது சங்கத்தின் தீர்மானம்.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர் மீதான தண்டனையை இல்லாது செய்வதன் மூலம் தமிழர்களுடன் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதில் தான் தீவிரமாக இருக்கிறார் என்பதை ஜனாதிபதி உலகுக்கு உணர்த்த முடியும் என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இராணுவத்தின் ஒத்துழைப்போடு யாழ்ப்பாண கோட்டை புனரமைப்பு

இலங்கையில் தொல்லியல் சிறப்பு வாய்ந்த இடங்களில் யாழ்ப்பாணம் ஒல்லாந்தர்கால கோட்டை மிக முக்கியமானது. 1618 இல் பிலிப் டி ஒவ்வேராவின் தலைமையில் போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் கட்டியெழுப்பப்பட்ட இக் கோட்டை ஆரம்பத்தில் சிறியதாக சதுர வடிவமாக அமைந்திருந்தது.

1658இல் ரைக்லோப் வான் கோகின்ஸின் தலைமையிலான ஒல்லாந்தர் இந்த கோட்டை மீது தாக்குதல் மேற்கொண்டு 1658 ஜூன் 20 ஆம் திகதி போத்துக்கேயரை அடிபணிய வைத்து கைப்பற்றிய போது போத்துக்கேயத் தலைவராக இருந்தவர் ஜெஆப் டி மெல்கோ டி சம்யோ ஆவார்.

அந்த மோதலின் போது கோட்டை முழுமையாக சிதைவடைந்தது. பின்னர் ஒல்லாந்தரால் மிகவும் நெறிப்படுத்தலுடனும் உயர் தரத்துடனும் அளவில் பெரியதாகவும் அமைக்கப்பட்டது. இந்தக் கோட்டையின் உட்புற மையப்பகுதி இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மைதானமாகவும் Garrison Parade Ground கிழக்குப் புறமாக தேவாலயமும் ஜெல்டர் லாண்ட்(Gelder Land) காவல் அரணுக்கு கீழ்ப்பக்கமாக ராணியின் வாசஸ்தலமும்(Queen's House) அமைக்கப்பட்டது.

கோட்டையின் தென்புறமாக பரீஸ் லாண்ட்(Friesland) சீலாண்ட்(Zeeland) ஹொலாண்ட்(Holland) ஆகிய காவல் அரண்களுக்கு இடையில் சுவர்களுக்கு மத்தியில் களஞ்சிய அறைகள் அமைந்திருந்தன. விஷேட வாயிலுக்கு சற்று தென்புறமாக காவல்துறை வசிப்பிடங்களும் (Police Quarters) அமைந்திருந்தன. இந்த இடம் ஒல்லாந்தர் காவல் மனை இருந்த இடமாக தொல்லியல் ஆய்வாளர்களால் இனங் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் ஒல்லாந்தர் கோட்டை



விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் இதன் வரலாற்றுச் சிறப்பு புதையுண்டு போகும் தறுவாயில் இருந்தபோது இலங்கை தரைப்படையினர் மேற்கொண்ட றிவிரச இராணுவ நடவடிக்கையின் மூலம் முழுமையாக மீட்கப்படும் போது கோட்டையினுள் அமைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் அனைத்தும்

51-வது படையணித் தலைமையகம்
இராணுவ முகாம்
யாழ்ப்பாணம்

விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டிருந்தமை இலங்கையர்களின் அபாக்கியமேயாகும்.

மேலும் இந்த கோட்டையை புற்களாலும் புதர்களாலும் அழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டியது இலங்கையர்களான நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களுக்கும் இந்த கோட்டையை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அதன் மூலாரம்பமாக இராணுவத்தின் முழு ஒத்துழைப்புடன் புனரமைப்புப் பணிகள் அண்மையில் ஆரம்பமாகின. அதன் பொருட்டு வட மாகாண ஆளுநரின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றது.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியின் வழிகாட்டலின் பேரில் 51-வது படையணி தளபதியின் மேற்பார்வையில் இதன் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கூடிய விரைவில் இதன் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்து முன்னர் இருந்ததைப் போன்ற தோற்றத்துடன் மக்களுக்கும் நாளை பிறக்கவிருக்கும் சந்ததிகளுக்கும் பார்வையிடுவதற்கு ஆவன செய்வதே தரைப் படையினரின் எதிர்பார்ப்பாகும்.

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி இந்திரா சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக நடைபெறும். இப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பங்களை தலையாழி விளையாட்டுக் கழகத்தில் பெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் கழகத்தினர் கேட்டுள்ளனர். (ச-14)

## மணவாளக்கோல உற்சவம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய் பிள்ளையார் கோவில் வருடாந்த மணவாளக் கோல உற்சவமும் 108 சங்கபிஷேகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடைபெற உள்ளது.

இவ் அபிஷேகம் புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் மண்டலாய்ப் பிள்ளையாருக்கு நடைபெறவுள்ளது. (ஓ-35)

## மகாகும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

தென்புலோலி வடுவாவத்தை அருள்மிகு பத்திரகாளி சமேத ஆதி வீரபத்திரர் கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 8 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேகம் புற்றளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த ஜெயபாலசுந்தரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஓ-35)

## வாழ்வாதாரப் பண்ணை ஆரம்ப வைபவம்

(மருதங்கேணி)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை கட்டைவேலி சேகரத்தின், நியூட்டன் மெதடிஸ்த வாழ்வாதாரப் பண்ணை அர்ப்பணிப்பு ஆரம்ப வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு குடத்தனை வீதி வலிக்கண்டியில் சேகர முகாமைக் குரு அருட்திரு. என்.அருள்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபை தலைவர் பேரருட்திரு. டபிள்யூ.பி.பெனேசன் யோசப் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-35)

## யாழ். இந்து மகளிர் கல்லூரி நாளை ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் தவணைக்காக நாளை ஆரம்பமாக உள்ளது.

எனினும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நிலையமாக கல்லூரி இயங்குவதால் தரம் 6,7,8 மாணவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ச-14)


## சுவரொட்டி சித்திரப் போட்டி

16.08.2009 அன்று வெளிவந்த காலநிலை மாற்றம் தொடர்பான சுவரொட்டிச் சித்திரப்போட்டியின் ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய இறுதித்திகதி பலரது வேண்டுகோளுக்கிணங்க 30.09.2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது. முடிவுகள் 10.10.2009 அன்று வெளியிடப்படும்

தகவல்
VDF TRRO SOND JSAC
கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் பங்கான நிறுவனங்கள்

(C-3255)

## புறொயிலர் கோழி இறைச்சி விற்பனைக்கு

MAXIES (Halal-கலால்) புறொயிலர் கோழி இறைச்சி தோல் அகற்றி சுத்தம் செய்தது எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விலை 1 Kg -550/=

வரணிமிசன் பண்ணை
விற்பனை நிலையம்
145,நவீன சந்தை,யாழ்ப்பாணம்.
T.P.: 2868

(3368)

## தோட்டக் காணி விற்பனைக்கு

அளவெட்டி டச்சு றோட்டில் 8 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
4949234

(3377)

# சுன்னாகம் வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவுநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தின் (விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்) நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சமூக நலத் துறை மாவட்ட திட்ட இணைப்பாளர் த. கிருபாகரன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி. நா. கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், நினைவுப் பேருரையாளர் அறிமுகத்தை வாழ்வகம் உப செயலாளர் வை. க. ரவீகரன், விழிப்புலனற்றோரின் வளமான வாழ்வில் கணனியின் பங்கு என்னும் பொருளில் பேருரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணத் தொழில்நுட்ப கல்லூரியின் கணனி பொறுப்பாசிரியர் த. அகிலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் வாழ்வக மாணவர் களின் கலை நிகழ் வுகளும், கு. ரவீந்திரன் குழுவினரின் புல்லாங்குழல் இசையரங்கும் இடம்பெறவுள்ளது. (ஓ)

# தாகசாந்தி

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலய மஹோற்சவ காலங்களில் ஆலய தண்ணீர்ப் பந்தல் சபையினரால் அடியார்களுக்கு தாகசாந்தி செய்து வருவது வழக்கம். இம்முறையும் சபையினர் அப்பணியை தொடர்ந்து செய்து வருகின்றனர். (ஓ)

# விளையாட்டுவிழா

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் சங்கிலியன் தோப்பு J/109 கிராம அலுவலர் பிரிவு மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு யாழ். நல்லூர் சாதனா தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் திருமதி. புஸ்பவதி மன் மதராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாய கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்க ளாக அகதிகள் புனர்வாழ்வு நிலைய உத்தியோ கத்தர் பேராசிரியர் ப. சிவநாதன் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

கல்விக்கான உணவு செயற்திட்டம் தொடர்பான வருடாந்த அறிக்கையினை உடனடியாக உலக உணவுத்திட்ட திட்டப் பணிப்பாளர், தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, 177 காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரிக்கும் மற்றொரு பிரதியை வ. ஸ்ரீகந்தராஜா பிரதிக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வித் திணைக்களம் என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல வலயக் கல்வி அலுவலகங்களையும் வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4-19)

# சேவைநலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற திருமதி சரஸ்வதி சொக்கலிங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3. மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க. தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் வலி தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், சுன்னாகம் வலி தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன், கௌரவ விருந்தி னர்களாக யாழ். மாவட்ட செயலக மீன் எழுச்சித் திட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் வே. விசுவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# வாரம் ஒரு தகவல்

## மாப்பிள்ளை

“உங்க பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடிக் கெண்டிருந்தீர்களே... என்ன ஆச்சு?”

“நேற்றுக்கூட பார்த்துவிட்டு வந்தேன். ஒரு நல்ல இடம். எனக்குப் பிடிச்சிருக்கு. என் சம்சாரத்துக்குப் பிடிக்கவில்லை. என்ன செய்வது?”

“குடும்பத்தில் எப்பொழுதும் அனுசரித்துப் போவது தான் நல்லது.”

“ஜப்பான் மாதிரி இருந்தால் கவலையில்லை... கடைக்குப் போய் இரண்டுபேருக்கும் பிடித்தமாதிரி ஒரு மாப்பிள்ளையை வாங்கிக் கெண்டு வந்து விடலாம்”

“என்ன சொல்றீங்க?”

“ஜப்பானில் உள்ள கோப் என்ற நகரத்தில் மாப்பிள்ளை வியாபாரம் செய்யும் கடைகள் இருக்கிறது”

“அப்படியா?”

“ஆமாம். அங்கே வரிசையாக பல வாலிபர்களை உட்கார வைத்திருப்பார்களாம். பெண்ணைப் பெற்றவர்கள் வந்து பார்த்து தேவையான மாப்பிள்ளையை விலை கொடுத்து வாங்கலாமாம்.”

“வேடிக்கையாக இருக்கிறதே!”

“உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. எனக்கு வேதனையாக இருக்கிறது.”

“ஏன்?”

“பின்ன. என்ன சேர்? எதற்கெடுத்தாலும் மறுத்துப் பேசும் மனைவியை வைத்துக்கொண்டு... நான் எப்படி என் பெண்ணுக்குச் சீக்கிரமாக ஒரு மாப்பிள்ளையைத் தேட முடியும்.”

“அதுதான் ஆரம்பத்திலேயே சொன்னேனே... அனுசரித்துப் போகக் கற்றுக் கொள்ளுங்கள்... என்னை மாதிரி!”

“அது எப்படி?’

“நான் என் சம்சாரத்துக்கு முன்னால் வாயே திறக்க மாட்டேன். அபூர்வமாக சிலசமயம் அவசியம் ஏற்படும் போதுதான் திறப்பேன்!”

“அது எப்போ?”

“கொட்டாவி விடும் சமயங்கள் மட்டும்!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70-80 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 50 |
| தக்காளி | 30 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 90 | 110 | -- |
| கரட் | 100 | 100 | 80 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 20 | 40 | 20 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 45 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 40 | 50 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 50 | 50 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25 |

# இராசி பலன்

06.09.2009

(ஆவணி 21, ஞாயிற்றுக்கிழமை)

துதியை முன்னிரவு 11.11 மணிவரை

உத்தரட்டாதி பின்னிரவு 4.31 மணிவரை

அமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், பிதாசிந்தை, எதிர்பாராத நன்மை, சயன சுகக்குறைவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், செய்தொழில் முன்னேற்றம், தனலாபம், குடும்ப நலம். |
| மிதுனம் | சுபநிகழ்வு, அதிகாரம், காரிய நன்மை, பிறர் உதவி. |
| கடகம் | உஷ்ணநிலை, முயற்சி தாமதம், ஆன்றோர் மதிப்பு, பிரயாணம். |
| சிங்கம் | காரிய தடங்கல், எதிர்பாராத பகை, உடல் நலக்குறைவு, போசன சுகம். |
| கன்னி | காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, திடீர் பயணம், நல்ல செய்தி. |
| துலாம் | காரிய சித்தி, பணவருவாய், உடல் நலம், சத்துரு ஜெயம். |
| விருச்சிகம் | கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், வியாபார நன்மை, மனஸ்தாபம். |
| தனுசு | நல்ல முயற்சி, வாகன சுகம், புதிய விடயம், பயந்த சுபாவம். |
| மகரம் | வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, சகோதரர் உதவி, இனிய சம்பவம். |
| கும்பம் | தனவிரயம், முயற்சி தாமதம், தொழில் விருத்தி, விவாதம். |
| மீனம் | முயற்சி கைகூடும், தேகநலன், நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம். |

வளவன்

# நரகப்பிரபஞ்சம்

கண்ணீர்
கரைபுரண்டு
வறுமையில்
வரண்டு போயிற்று

ஏழைக்கு
பணம் எதிரியாகி
கல்வியும்
ஏமாற்றமாயிற்று

கலாசாரம்
தூய்மையிழந்து
கற்பும்
களவு போயிற்று

திருமணம்
சோம்பேறிகளை
விலைக்கு வாங்கி
மனதை சந்தேகித்துப் போயிற்று

கோவில்களிலும்
திருட்டு மலிந்து
கடவுளுக்கே
பாதுகாப்பில்லாமல் போயிற்று

விமர்சனம்
ஆயுள் இழந்து
விடியலைத் தொலைத்து
அநாதையாய் போயிற்று

நரக பிரபஞ்சத்தில்
நடைபழகிப் போகிறது
ஆயிரமாயிரம்
சோகங்கள்...

ஜே.எஸ்.ராஜ்
யாழ். பல்கலைக்கழகம்.

# பணிகளை முடித்துத் திரும்பும் இந்திய மருத்துவக்குழுவினர்

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற கால கட்டத்தில் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்த அறுபது பேரை உள்ளடக்கிய இந்திய மருத்துவக்குழு தனது பணிகளை முடித்துக்கொண்டு தாய் நாட்டிற்கு திரும்பவுள்ளது.

வடக்கில் மோதல் இடம்பெறும் பகுதியில் காயமடைந்த பொதுமக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மார்ச் மாதத்தில் இலங்கை வந்த இக்குழுவினர் புல்மோட்டையில் 3 மாதங்களும் செட்டிகுளத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி முகாமில் 3 மாதங்களும் வைத்திய சேவையை வழங்கியுள்ளனர்.

பாரிய அளவிலான 500 சத்திரசிகிச்சைகள், சிறியளவான 3ஆயிரத்து 500 சத்திர சிகிச்சைகள், 22ஆயிரம் ஆய்வுகூட பரிசோதனைகள் உள்ளடங்கலாக 42 ஆயிரம் நோயாளிகளுக்கும் காயமடைந் தோருக்கும் சிகிச்சை அளித்துள்ள இக்குழுவி னர், தற்போது தமது பணிகளை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதாக இந்தியத்தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்குழுவினர் எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு புறப்பட்டுச்செல்வதுடன் அவர்களின் சேவையைப் பாராட்டும் நிகழ்வொன்றும் கொழும்பில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# ஆயுள்வேத மருந்துக்கூட்டுத்தாபனத்தின் யாழ். விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச ஆயுள் வேத கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண விற்பனை நிலையம் சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவினால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 60 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , ஆயுள்வேத ஆணையாளர் , சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் , மகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

# மாற்று வலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 58 மாற்று வுலுவுள்ளவர்கள் வாகனங்கள் செலுத்துவதில் திறனும், சாரதி அனு மதிப்பத்திரம் பெறுவதில் ஆர்வமும் காட்டி யாழ்.மாவட்ட சமூக சேவைத் திணைக்கள ஏற்பாட்டை நாடியிருந்தனர். சமூகசேவை உத்தியோகத்தர்கள் பயனாளிகளை இனம் கண்டி ருந்தனர்.வடக்கு மாகாண சமூக சேவைப் பணிப்பாளர் ஊடாக நடவடிக்கைகளை இணைப்பாளர் த.கிருபாகரன் மேற்கொண்டிருந்தார்.

இதன் பிரகாரம் இம்மாதம் 12,13 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள நடமாடும் சேவை மூலம் இவர் களுக்கான சாரதி அனுமத்திப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே இவர்கள் உரிய ஆவணங்களையும் யாழ்.மோட்டார் திணைக்களத்தின் மூலமான பரீட்சிக்கப்பட்ட சான்றிதழையும் (Weight Certificate) சமர்ப்பிக் குமாறு கேட்கப்பட்டுள்ளனர். தகுதியானவர்கள் சாரதி அனு மதிப்பத்திரம் பெறுவதற்கான சான் றிதழ்களுடன் பிரதேச செயல கங்களில் உள்ள சமூக சேவை உத்தியோகத்தரை சந்தித்து மேலதிக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும் என மாவட்ட சமூக நலத்துறை திணைக்கள திட்ட இணைப்பாளர் கிருபாகரன் தெரிவித்துள்ளார். ஓ

# உயர்தரப்பரீட்சை நடன நாடக வினாப்பத்திரங்களில் அச்சுபிழை

## மாணவர்கள் அசௌகரியம்

(கொழும்பு)

உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்ட நடனம் மற்றும் நாடகக் கலை வினாப்பத்திரத்தில் அச்சுப்பிழை காரணமாக மாணவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் குறித்த வினாப்பத்திரத்தில் இத்தகைய சிக்கல்கள் நிலவியதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்கவும் உறுதிசெய்துள்ளார் . வினாப்பத்திரத்தில் பகுதி I இலும் பகுதி II இலும் மற்றும் இரண்டாம் தாளிலும் இந்தஅச்சுப்பிழை காணப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

வினாக்கள் அடங்கிய 4 பகுதிகளே அந்த வினாத்தாளில் காணப்படுவதாகவும் அது இரண்டு தடவைகள் அச்சிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் எவ்வித பிரச்சினையோ அல்லது அநீதியோ மாணவர்களுக்கு ஏற்படவில்லை என தெரிவித்த பரீட்சை ஆணையாளர் நாயகம் இது தொடர்பாக சகல இணைப்பு நிலையங்களுடனும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் தொடர்பு கொண்டு 1/2 மணித்தியா லத்திற்குள் பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதேவேளை இன்றுடன் நிறைவடைகின்ற உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (4)

# இராணுவ சேவையிலிருந்து விலக ஏழாயிரத்து 200 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் கௌரவமான முறையில் பதவி விலக்குவதற்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இராணுவ சேவையிலிருந்து விலகிக்கொள்ளும் நோக்கில் சுமார் 7 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டரீதியான முறையில் பதவி விலகுவதற்கு அளிக்கப்பட்ட பொது மன் னிப்பு காலம் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நிறைவடைவதாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ள போதிலும், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சட்டரீதியாக சேவையிலிருந்து விலகிக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் மனோன்மணி



இல.44/1, அம்பாள் வீதி,நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் மனோன்மணி நேற்று (05.09.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராசா- மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் (உரிமையாளர், கலாஜோதிமில், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருச்சிற்றம்[illegible] மற்றும் சிவகுருநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தர்மசோதி (முன்னாள் கணக்குப் பதிவாளர், கல்வித் திணைக்களம், [illegible]னுராதபுரம்) மற்றும் மகேஸ்வரன் (Structure Management System Engineer Australia ) , தர்மபாலன் (கலாஜோதி மில் , நாயன்மார்கட்டு), சிவசோதி, காலஞ்சென்ற தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தலிங்கம் (அதிபர் யாழ். அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம்) , லிங்கேஸ்வரி (அவுஸ்திரேலியா) , மலர்மங்கை, இராஜகோபால் (முகாமைத்துவ உதவியாளர் , பிராந்தியப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், திலீபன் (Sales Professional, Telstra, Melbourne, Australia), திவ்யன், சுபகா, நிரூபனா, சதுமிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.44/1,அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர் (3376)

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் U.K Citizen 42,37,33,31 வயது கனடா Citizen 33,31 வயது, கொலண்ட் Citizen 36 வயது, அவுஸ்திரேலியா Citizen 38, பிரான்ஸ் Citizen 27வயது (R.C) ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. *தொடர்பு லண்டன் ஐங்கரன்.*

T.P No.-0044-7535384166 Fax-0044-2086810701
-0044 - 7508295863 -0044 -2086720673

(3370)

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் U.K Citizen 36,35,33,30 வயது கனடா Citizen 37,34 வயது மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர்.24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. *தொடர்பு லண்டன் ஐங்கரன்.*

T.PNo.-0044-7535384166 Fax -0044-2086810701
-0044 - 7508295863 -0044 -2086720673

(3370)

## காணிகள் விற்பனைக்கு

உரும்பிராய் மேற்கு அன்னுங்கை சிவன்வீதியில் 2 பரப்புக் காணியும் அருகில் துவாரகா வீதியில் 3 3/4 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு -0775184725/0775999746
-021 2229119 / 021 222 1134

(3365)

## CATHOLIC COLLEGE OF HIGHER STUDIES (C.C.H.S)

English Course - 6 months
week days 3.30 - 5.30 p.m.
6th BATCH BENINS SHORTLY
Good Opportunity for Students Sat A/L
Vacancies exits only for a few more
**Apply Early**
**Contact: AHAVOLI, St Patrick's Jaffna.**

(3364)

## வீடு விற்பனைக்கு

இராசாவின் தோட்டம் வீதி யாழ்ப்பாணத்தில் 2 பரப்பு காணியில் சகல வசதிகளையும் கொண்ட மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு -0775184725 / 0775999746
-021 2229119 / 021 222 1134

(3365)


## பயிற்சி நெறி இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

குடும்பநல உத்தியோகர்த்தர்களுக்கான பயிற்சிநெறி அங்குராப்பணநிகழ்வு திட்டமிட்டபடி நாளை திங்கட் கிழமை காலை 11 மணிக்கு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு பதிலாக பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என்று யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அறியத் தந்துள்ளார். (ஓ)

## சித்த வைத்தியசாலையை மேம்படுத்த நடவடிக்கை

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும்கோண்டாவில் இலவச சித்த வைத்தியசாலைக்கு சொந்தமாக காணி, கட்டம் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு சபையினர் முயற்சித்து வருகின்றனர். தற்போது வாடகை கட்டத்தில் இயங்கும் வைத்தியசாலையை சொந்த இடத்திற்கு மாற்றி மூலிகை தோட்டம், நீர் வளர்ப்பு , மருந்து உற்பத்தி போன்றவற்றை மேம்படுத்த நல்லூர் பிரதேச சபையினர் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-36)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக் கான கலந்துரையாடல் நாளை மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## மண்டைதீவுப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ள ஆவன செய்வார்களா ?

### அவ்வூர் மக்கள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் இவ் வருடம் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதா என மண்டைதீவு விவசாயிகள்" எதிர்பார்க்கின்றனர்.

1991 ஆம்ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் மண்டைதீவு மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் வசித்து வந்தனர்.

1996 இல் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒரு சிலர் தமது நெல் வயல்களில் நெற்பயிரிட முனைந்தும் போதிய மழைநீர் கிடைக்காமையால் வெற்றியளிக்கவில்லை.

அத்துடன் 1997 இல் இருந்து உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் பல வித கிராமங்களில் நெற் செய்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை.

இக் கிராமத்தின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உவர்நீர்த் தடுப்பு அணை சில இடங்களில் முற்றாக சேதமடைந்துள்ளதால் உவர் நீர் கிராமத்து நெற் காணிகளுக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மழைநீரும் முற்றாக வடிந்து கடலுடன் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு இதனால் கிராமத்தில் உள்ள கிணற்றுநீரும் உவர் நீராக மாறிவருகின்றது.

இதனைத் திருத்துவதற்கு இது வரை காலம் பாதுகாப்பு அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் காலத்திலாவது இதனைத் திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாதா என மக்கள் ஆதங்கப் படுகின்றனர்.

அத்துடன் கடந்த 18 வருட காலமாக மக்கள் அதிகளவில் வகிக்காததால் கட்டாக்காலி மாடுகள் பல்கிப் பெருகி அதிகரித்துக் காணப் படுகின்றது.

இவற்றில் அங்கு வசிக்கும் பொதுமக்கள் பொறுப்பேற்று வளர்க்கும் கால்நடைகளை விட மேலும் பல கால்நடைகள் கண்ணாக் காடுகளில் வசித்து வருகின்றன.

இவற்றையும் நெற் செய்கை மேற்கொள்வதனால் கட்டுப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அதாவது உரிமை கோரப்படாத கால் நடைகள் அக் கிராமத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

இதுதொடர்பாக உரிய அதிகாரிகள்கவனத்திற் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு 19 வருடங்களாக பயிரிடப்படாத வயல் நிலங்களில் நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள ஆவன செய்து தர வேண்டுமென்று மண்டை தீவு விவசாயிகள் எதிர்பார்க்கின் றனர். (ஓ-29)


## சர்வதேச பட்டப்படிப்பை

### பெற்றுக்கொள்வதற்கான மாபெரும் இலவசக் கருத்தரங்கு



நீங்கள் பட்டதாரி ஆகவும் அல்லது உங்களின் பட்டப்படிப்பைச் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தி வெளிநாட்டில் வேலைபெற்று உழைத்திடவும்.

உலகத்திலேயே முதல் தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்திடவும்.

உங்களின் பட்டப்படிப்பை உங்களின் உழைப்பினிலே முடித்து வெளிநாட்டில் நல்ல வாழ்க்கையைத் தொடரவும்.

கொழும்பிலிருந்து வருகைதரும் துறைசார் வல்லுனர்களினால் நடத்தப்படுகிறது.

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 12.09.2009 சனிக்கிழமை
முற்பகல் 09.30 மணி

குறுகிய காலத்திலும், மிகக்குறைந்த செலவிலும் வெளிநாட்டில் படித்துப் பட்டம் பெற்றிட, பல இலகுவான வழிமுறைகளுடன் நாம் உங்களுக்கு வழிகாட்டக் காத்திருக்கின்றோம்.

100 % விசா உத்தரவாதத்துடன்



உங்களின் கனவை நாம் நிறைவேற்றித் தருகிறோம்

இவற்றுக்கெல்லாம் விடைகாணவும் உங்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் சரியான பதிலைப் பெற்றிடவும் விரையுங்கள்

**யாருக்காக இந்தக்கருத்தரங்கு**

பட்டதாரிகள், பட்டதாரி அல்லாதவர்கள், வெளிநாட்டில் வேலைசெய்து பட்டப்படிப்பை முடிக்க விரும்புகிறவர்கள், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA), A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், மற்றும் தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தை விரும்பும் பெற்றோர்கள், ஆர்வலர்கள்.

முந்துங்கள் கருத்தரங்குக்கு வருகை தரும் மாணவர்களுக்கு விசேட சலுகைகளும் கட்டணக்கழிவுகளும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு

# BCHS

No.15, Sirambiyadi Lane,
Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550
HotLines: 0773501499 / 0777222422
Email: info@bchs.lk

(3254)

# விரிசல்களை உருவாக்கும் வீண் விரயங்கள்

இன்றைய நவீன நாகரிக யுகத்தில் “பணம்” எவ்வளவுதான் இருந்தாலும் சிறகு கட்டிக் கொண்டு தான் பறக்கின்றது. எந்தப் பக்கம் திரும்பினாலும் விலைவாசி களின் உயர்வு நம் அனைவரையும் பய முறுத்திக் கொண்டிருக்கிறது. என்று தான் சொல்ல வேண்டும்.



சமாளித்து வாழ்வதே பெரிய கஷ்டம் என புலம்பித் தவிப்போர் நம்மில் அநேகர் உள்ளனர். சிக்கனம் எதில் பார்ப்பது என்று தெரியாமல் விழிக்கும் நிலை. அநேகர் தம் வாழ்க்கைச் செலவை எவ்வாறு சிக்கனப்படுத்தி வாழ்வது என்று தலையைப் போட்டுப் பியத்துக் கொள்ள வேண்டி யதாய் இருக்கிறது.

இக்கால கட்டத்தில் தத்தமக்குள் உள்ள குறைபாடுகளை சீர்திருத்தி வாழ வேண் டும் என்பதை புரிந்து கொள்ள தவறிவிடு கின்றனர். “குறைபாடு” என்று நான் கூற வந்தது, வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் அன் றாட சின்னச்சின்ன விடயங்களைத்தான்.

நமக்குத் தெரியாமலேயே வீண் விரயங்கள் ஏற்படுகின்றன.

அதன் காரணமாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகின்றோம். நாளாந்தம் எமக்கு எந்த வழியில் வீண் விரயம் ஏற்படுகின்றது என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்த வீண் விரயங்கள் கூட குடும்ப வாழ்வில் விரிசல்களை உருவாக்குகின்றன.

அன்றாட செலவுகளைக் கூட கணக் கிட்டு பட்டியல் போட்டு பார்த்து அனாவசிய வீண் செலவுகளை தவிர்ப்பது மேலும் டெலிபோன் பில், மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் என்று பல வகைகளில் செலவா கின்றது. சிக்கனமாக பாவித்து பணவிர யத்தை தடுத்து மிச்சம் பிடிக்க வழி அமைக்கலாமே?

இக்கால கட்டத்தில் தொலை பேசிதான் முதலிடம் வகிக்கிறது. தொலைபேசி இல்லையேல் வாழ்க்கை இல்லை என்கிற நிலையாகி விட்டது. அத்தனை தூரம் அதன் மவுசு ஏறி விட்டது. ஆனால் அதை எப்படி பயன்படுத்தினால் நமக்கு சாதகமாய் இருக்கும். பணச் செலவு குறைய என்ன ஆவன செய்ய லாம் எப்படி சிக்கனத்தை பயன் படுத்தலாம் என்றெல்லாம் நாம் சற்று சிந்திக்க வேண்டும்.

தொலைபேசியை பொறுத்த வரை வரும் அழைப்புகளுக்கு கட்டாயம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

அதேநேரம் அவசியம் என்று படும் பட்சத்தில் மட்டும் பேசலாம். அதைவிட்டு அனாவசிய தேவைகளுக்குக் கூட சர்வ சாதாரணமாக பயன்படுத்த நினைப்பது தமக்குத்தாமே செலவுகளுக்கு வழி வகுப்பதாகும்.

தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டால் சிலர் வீடுகளில் காலையில் இருந்து இரவுவரை இயங்கிக் கொண்டிருக்கும் – பார்க்காவிட்டாலும் கூட இப்படி ஓட விடு வது தவறில்லையா? தேவைக்கு மட்டும் உபயோகித்தால் நல்ல பல பயன்கள் பெறு வதோடு மின்சாரம் வீணாவதையும் தடுக்க முடியுமல்லவா?

மின் விசிறிகளைக்கூட தேவையில்லாமல் சுழலவிடுவதும். அறைகளில் யாரும் இல்லாதவிடத்து மின் விசிறி சுழன்று கொண்டிருப்பதும் மின்சார கட்டணம் உயர வழியாகும்.

அது மட்டுமல்ல இயந்திரமாய் இருந்தாலும் அதற்கும் சற்று ஓய்வு கொடுத்தால் நீடித்து பாவிக்க முடியுமல்லவா?

அயன் பண்ணுவதை எடுத்துக் கொண்டால் ஒவ்வொருவர் தேவைக்கேற்ப பல தடவை உடைகளை அயன்பண்ணுவது மின்சாரம் அதிகம் செலவாக வழியாகும்.

ஏன் ஒரே நேரத்தில் அனைவர் உடைகளும் ஸ்திரி போட்டுக் கொண்டால் நேரமிச்சமும் – அதேநேரம் மின்சாரவிரயமும் பாதுகாக்கப்படுமல்லவா? பணச் செலவையும் தடுக்கலாம்.


அன்றாடம் பாவிக்கும் காஸ் அடுப்பைக்கூட இன்றைய எரிபொருள் விலையில், அவதானமாக பாவித்தலே சிறந்தது. சமைக்கும் போது அடுப்பை குறைந்த அளவில் எரியவிட்டால் அதிகப்படியாக பலநாட்கள் நின்று பிடிக்கும்.

வீட்டு வேலைகளை அவசரமாக செய்ய நினைத்து அடுப்பில் எதையாவது வைத்து விட்டு வேறு வேலைக்கு சென்றுவிட்டு அடுப்பை மறந்து விடும் நேரங்களும் உண்டு.

அதனால் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படு வது உண்டு. எதை அடுப்பில் வைத்தாலும் சரி நெருப்பை குறைவாக எரியவிட்டால் தமது ஏனைய வேலைகளையும் பதற்ற மின்றி செய்து கொள்ளலாம்.

வேலை முடித்து மீண்டும் சமையலறை போகும்போது அடுப்பில் வைத்தது வெந்து இருக்கும். நேரமும் மிச்சப்படும். இப்படி நாம் பல வழிகளில் சிக்கனத்தை கடைப்பிடிக்கலாமே! இதுபோல் அனேக விடயங்களை சிந்தித்து செயலாற்றினால் வாழ்க்கைச் செலவும் ஓரளவு குறைய ஏதுவாகும்.

பறக்கும் பணத்தை பிடித்து நிறுத்த முடியாது போனாலும் முயற்சி பண்ணி வாழ்க்கைச் செலவை சமாளித்து வாழும் திறனை பெற வேண்டும்.



பணத்தை செலவிடுவது சுலபம், அதைத் தேடுவது கஷ்டம். அப்படிப் பெறும் பண த்தை நாம் எவ்வாறு பயன்படுத்தினால் நன்மையடையலாம் என்பதை சிந்தித்து செயலாற்றுவதே சிறப்பான செயலாகும்.

## செல்லமே! என்னை மன்னிப்பாயா?

நாய் என்று உன்னை நான் நினைத்ததில்லை
நட்பென்று நான் வளர்த்து வந்தேன்
நாளாக நாளாக நம்நட்பு இறுகிற்று
நான் வரும்போது திசைபார்த்து வாலாட்டி – கூத்தாடி
கொண்டாடி குரல் கொடுக்கும் உன்னை

என்காலை கட்டிப்பிடித்து அன்புமுத்தம் தருமுன்னை
எங்குசென்றாலும் நிழல் போல் வரும் துணையானவுன்னை
நான் உண்ணும்வரை காத்திருந்து உண்ணுமுன்னை
நாயென்பேனோ? நன்றியே! நட்பே! அன்பே!
என் உயிரே! உறவே! நானுறங்க – ஊர் உறங்க
உணர்வோடு எம்மை காக்கும் காவல் தெய்வமே!



இறுதிநாட் யுத்தத்தில் கோரமுழக்கம் உன்னை
கலைத்தது என்னையும் நிலைகுலைய வைத்தது – காலன்
வடிவில் வந்த கடைசிநாட்களில் நீ காட்டிற்கு போய்விட்டாய்
நான் காட்டை கடந்து பஸ் ஏறும் போது கண்டு கொண்டாய் – போலும்
எமது பஸ்ஸிற்குப் பின் நீயோடிவரும் போதுநான் உன்னைக் கண்டேன்
செல்லமே நான் என்ன செய்வேன்? கணவன் சாக மனைவி,
பிள்ளை சாக பார்த்து தப்பியோடும் வே[illegible]ளை – யார்தான்
என்ன செய்வது? மனிதாபிமானத்தி[illegible]கு வந்த சோதனை
நாம் கண்டிராத வேதனை ஆயுதம் செய்த சாதனை
நன்றியுள்ள செல்லப்பிராணியே நான் செய்ததை மன்னிப்பாயா?
*“உய்வில்லை நன்றி கொன்ற மகற்கு”*
என்று தெரியும். விபரீத காலம்
விநாசம் செய்யும்போது நானோர் அற்ப
மனிதன் என்ன செய்வேன்?
செல்லமே! மன்னிப்பாயா?

**பா. பாலச்சந்திரன் - மயிலணி**

# விட்டுக்கொடுத்து வாழ்வதில் சுயநலம் இருக்கக் கூடாது

ஒரு ஆணும் பெண்ணும் கல்யாணம் செய்து கொள்வதே சந்தோஷமாக வாழ்வதற்கே. கல்யாணம் செய்து கொள் வதால் மட்டும் சந்தோஷம் வந்து விடாது. [illegible] பார்த்து வந்த போது சில கணங்களும் பிறகு கல்யா[illegible]று சில மணி நேரங்களில் காதல் வந்து விடும் என்று சொல்ல முடியாது. ஒன்றாக சேர்ந்து வாழும் போது ஒருவரை ஒருவர் நேசிக்கத் தொடங்குவார்கள்.



இந்த நேசம் பின்பு அன்பு காதலாக மாறுகிறது. அந்த காதல் நீடிக்க வேண்டுமானால் அதற்கான முயற்சிகள் வேண் டும். ஒருவரை ஒருவர் ஆழ்ந்து பரிசீலித்து அவரவர் மனப் போக்குகளையும் ஆசா பாசங்களையும், நோக்கங்களையும் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு நிற்காமல் அவைகளை நிறைவேற்ற செயல் புரிய வேண்டும்.

தாம்பத்திய உறவு என்பது இன்பத்திலும், துன்பத்திலும் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை பொறுத்தே உள்ளது. இல்லற வாழ்க்கை என்பது ஒருநாளும் தேக்க மடைந்து நின்று விடும் ஒன்றல்ல. ஒன்று அது மேலோங்கி செழித்து வளர்ந்து கொண்டே இருக்கும் அல்லது சிதை ந்து சீரழிந்து கொண்டே இருக்கும்.

இல்லத்தில் துன்ப மேகங்கள் சூழும் போது கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் ஆறுதலாக சேர்ந்து அதை அணுக வேண்டும். தனிப்பட்ட முறையில் இந்த நேரத்தில் கணவனோ, மனைவியோ சுயநலத்தோடு ஒருவரை ஒருவர் குறைகூறிக் கொள்வதும் அவமதிப்பதும் உண்மையான தாம்பத்தியத்திற்கு அழகல்ல. உற்ற துணையாக இருந்து செயல் படுவதே உத்தமமாகும்.

ஒருவருடைய சொந்த சிக்கலுக்காக திருமணம் ஒரு தீர்வாகாது. அவரவ ருக்கு ஒரு தனித்தன்மை உண்டு. தங்களின் குறை நிறைகளை பரிசீலித்து நமக்கு நாமே ஆத்ம விசாரணை செய்து தங்களுடைய சுமயதிப்பை காத்துக் கொள்ள வேண்டும். தம்பதிகள் ஒருவருக்கொரு வர் பிடிக்காத குணங்கள் இருந்தாலும் ஒருவருக்கொருவர் நேசித்து வாழும் போது அந்த குணங் களை தானாகவே மாற்றிக் கொள்வார்கள். இருவரும் ஒருவருக் கொருவர் தங்களிடம் குறைகளை ஆராய்ந்து திருத்திக் கொள்ளல் வேண்டும். விட்டுக் கொடுப்பதில் சுயநலம் இருக்கலாகாது. பிரதிபலனை எதிர்பாராமல் விட்டுக் கொடுப்பதே மேலானது.

திருமணமாவதற்கு முன் நம் வாழ்க்கையில் எதிர்வரும் மேடு பள்ளங்களை நாம் அவ்வளவாக பொருட்படுத்துவதில்லை.

தோல்விகளுக்கு நாமே பொறுப்பு என்று சமாதானமடைகிறோம். ஆனால் திருமணமானபின் இந்த நிலைமையை மாற்றி நமது மகிழ்ச்சியின்மைக்கும் தோல்விகளுக்கும் பொறுப்பேற்க ஆள் தேடுகிறோம்.

அது கணவனாகவோ மனைவியாகவோ இருக்கும். இது தன்னம்பிக்கை குறைவே காரணம். ஒருவருடைய குறைகளை மற்றவரால் ஈடு செய்ய முடியாது. தனது தோல்விகளுக்கு சரியான காரணங்களை கண்டறிந்து அதை திருத்திக் கொள்வதே சரியான பாதையாகும்.

இல்லற வாழ்க்கையில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் சில சமயங்களில் புண்படுத்துவது என்பது நேரிடவே செய்யும். கோபதாபங்கள் இல்லாத வீடே கிடையாது.

அத்தகைய நிலைகள் தோன் றும் போது மனப்பூர்வமாக மன்னித்து விடுவதே சிறந்த அன்பு கலந்த தாம்பத் தியத்தின் அடையாளம் ஆகும்.

வெறுமனே மறுத்து விடுதல், உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளுதல் பயன் தராது.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து சிறு சிறு பிரச்சினைளை பெரிதுபடுத்தாமல் மன்னித்து உள்ளத்திலுள்ள கோபதாபங்களை கழுவி வெளியேற்றி குதூகலம் அன்பும் நிறைந்த குடும்பமாக சிறந்த பிரஜைகளாக நம் குழந்தைகளை உருவாக்க முடியும். நாம் நினைத்தால் நம் குடும்பத்தை ஒரு கோயிலாக வைத்திருக்க முடியும்.

# நெல்லியடிக் கிளை திறப்புவிழா சிறப்பு இதழ்

# ESOFT Computer Studies

The Leader in Professional ICT Education

## இலங்கை அரசாலும், சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்டு ISO 9001 - 2008 தரச்சான்றிதழ் பெற்ற கணினி நிறுவனம்

### வாழ்த்துச் செய்தி



நெல்லியடியில் யாழ்வீதியில் அமைந்துள்ள ESOFT Computer study நிறுவனம் ஆரம்பிக்க உள்ளது. 2000ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நிறுவனமானது 2008ஆம் ஆண்டு அளவில் ISO விருதினை **"9001 : 2008"** விருதினை வென்ற நிறுவனமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இந் நிறுவனம் நெல்லியடியில் தனது சேவையினை வழங்குவதால் வடமராட்சி மக்கள் பெரும் நன்மை அடைவர். இச் சேவை மேலும் விரிவடைய இறை அருளையும் திருவருளையும் வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**சிவசிறி அ. செல்வராஜாக் குருக்கள்**
**நெல்லியடி தடங்கன் குழியடி**
**ஆலய பிரதமகுரு**

### வாழ்த்துச் செய்தி



கணினி, தொழிநுட்ப கல்வியை வடமராட்சி வரை விரிவாக்கம் செய்திருக்கும் ESOFT நிறுவனத்திற்கு எனது மனநிறைவான வாழ்த்துக்கள். Prove power எனச் சொல்வதுண்டு. அவ்வண்ணமாக யாழ்.தமிழ் மக்களாகிய நாம், எமது ஆற்றலை நிரூபித்து உலகிற்குக் காட்ட வேண்டிய முக்கிய நிலையில் உள்ளோம்.

அவ்வண்ணம் உலகிற்கு எம்மை அறிமுகப்படுத்த இன்று அவசியமான இரண்டு கல்வி அறிவுகளில் ஒன்று ஆங்கிலம், இரண்டாவது கணினி ஆற்றல்.

ஆகவே, கணினிக் கற்கையில் ஆற்றல்நிறைந்த, நவீன பாணியான, அனுபவமுள்ள நிறுவனங்கள் எமது மண்ணில் இப்போது கால் பதிக்கின்றன. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீறுகொண்டெழுந்து உச்சிக் கிளையை அடைவோம்.

நிறுவனப் பணியாளர்கள் ஆசியருக்கு இறைமகன் இயேசுவின் ஆசிகிட்ட வாழ்த்துக்கள்.

**அருட்பணி ராஜன் றோகான்,**
**அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை**
**வடமராட்சி.**

### BEST OF LUCK



It is truly a significant day today. The people of Nelliady are being given the opportunity to progress themselves along the same academic and professional pathways that are available to their brothers and sisters in the Southern part of this beautiful country.

ESOFT Computer Studies Private Limited is a well known entity that operates in several parts of Sri Lanka, and we are renowned for providing leading educational programmes including undergraduate courses such as the BIT Degree.

Gone are the days that parents had to send their children out of their traditional homes, seeking better infrastructure for education. With organizations such as ESOFT opening branches in the North and the East, parents can safely tend to the educational needs of their children in the comfort of their own town and city.

With the dawn of peace in Sri Lanka, His Excellency the President, Mahinda Rajapaksa has initiated the 'Uthuru Wasanthaya' (Northern Spring) to develop the province according to a home-grown strategy. Infrastructure development, electricity, water supply and sanitation, agriculture, irrigation, livestock development, inland fisheries, health, solid waste disposal, education, sports, cultural affairs and transportation are some of the areas that are being covered under this program. We at ESOFT are happy to participate in this effort in our own small way and look forward to a long and healthy relationship with the people of this beautiful region. After Jaffna, Nelliady is our second branch and we hope to provide the best educational services for the betterment of all concerned.

**Message from Dr. Dayan Rajapakse,**
**Managing Director / CEO**
**ESOFT Computer Studies Private Limited**

### வாழ்த்துச் செய்தி



கணினிக் கல்வி இன்று அனைவரதும் உயிர்நாடியாக உள்ளது. எனவே, இத் தொழில்நுட்பத்தைப் பயின்றவர்கள் உலகளாவிய ரீதியில் மிகவும் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளார்கள். இதற்கு பணம் மட்டும் இருந்தாற் போதாது. சிறந்த பயிற்சி மையங்கள் இருக்கவேண்டும். எனவே, யாழ். மக்களுக்குச் சிறந்த கணினிக் கல்வியை வழங்க ESOFT நிறுவனம் முன்வந்துள்ளமையை மனமாரப் பாராட்டுவதுடன் மேன்மேலும் இந்நிறுவனம் வளர எனது வாழ்த்துக்கள்

**திரு.மா.சயிலேந்திரா**
**பிராந்தியப் பணிப்பாளர்.**

### ESOFT இன் இன்று வரையான சாதனைகள்

- Esoft மற்றும் BIT யினை கற்பிப்பதில் இலங்கையின் முதன்மை நிறுவனம்
- BCS 3பிரிவுகளையும் கற்பிப்பதற்கு 2008ஆம் ஆண்டிலிருந்து தகுதி பெற்ற நிறுவனம்.
- BIT பாடநெறியினை மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து கற்பித்தல்.
- 2009ஆம் ஆண்டு Edexcel லினால் பரிந்துரை செய்யப்பட்ட ஒரே நிறுவனம்.
- 2009 ஆண்டிற்கான ISO 9001 : 2008 சான்றிதழினைப் பெற்ற நிறுவனம்.

### ESOFT ஐ ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- தொழிற்துறை ரீதியான திறமை வாய்ந்த பட்டதாரி வல்லுனர்களின் விரிவுரை
- இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய பாடநூல்கள்
- அனைத்துப் பாடங்களுக்கும் பிரபல தகவல் தொழிநுட்பக் கல்வி நிகழ்வுகளில் எமது மாணவர்கள் பல சாதனைகள் நிகழ்த்தியுள்ளனர்.

**No1 for BIT (UCSC) and BCS (UK)**



2008 ஆம் ஆண்டு நிகழ்ந்த BSC பட்டமளிப்பு விழாவில் 11 சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. அவற்றுட் 10 விருதுகளை ESOFT மாணவர்கள் வென்றார்கள் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.



Top Candidate Certificate Level | Top Candidate Diploma Level | Top Candidate PGDLevel
BCS Convocation 2008 Esoft Students

Top Candidate Certificate Level | Top Candidate Diploma Level | Top Candidate PGDLevel | Top Candidate PGDLevel
BCS Convocation 2007 Esoft Students




Worldwide Winners
BCS Convocation 2006

### ESOFT இல் BSC

கற்பவர்களே இலங்கை ரீதியிலும்/ சர்வதேச ரீதியிலும் முதற்பரிசுகள் பெறுபவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

2009 ஆம் ஆண்டு நிகழ்ந்த கொழும்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 138 மாணவர்கள்பட்டம் பெற்றார்கள். அவர்களில் 72 மாணவர்கள்எமது நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் என்பதை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.....

2007, 2008, 2009 ஆம் ஆண்டு தங்கப்பதக்கம் பெற்றவர்கள் எம் மாணவர்களே...



### வாழ்த்துரை



2009 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத்தையும் ஆங்கிலக் கல்வியையும் விருத்தி பெறச் செய்யும் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியில் தகவல் தொழில் நுட்பம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. நிறுவனத்தினர் தகவல் தொழில்நுட்பத்தை கற்பிப்பதற்கான சர்வதேச அங்கீகாரம் பெற்றவர்கள். வடமராட்சியில் இந்நிறுவனத்தினர் தமது கிளையைத் திறந்து வைப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்க்க இந்நிறுவனம் பெரிதும் உதவுமென நம்புகின்றேன்.

**திரு.வ.செல்வராசா**
**வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி**

### இயந்திர வடிவமைப்புக்களின் வழிகாட்டி...



ESoft Computer Studies நிறுவனத்தின் சிறப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இலங்கை அரசாலும், சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட இந்நிறுவனம் எமது மண்ணில் உருவாகி, மாணவர்களது தாகத்தைத் தீர்க்கும் என்பது நிச்சயம். வலது கைப் பொருளாகத் திகழும் கணினி விஞ்ஞானம் தகுதி, தரம், அறிவு, ஆற்றல், நுட்பம், விவேகம், கலாச்சாரம், பொருளாதாரம், சமூக அந்தஸ்து என்பவற்றை மேம்படுத்தி மாணவர்களை நற்பிரஜைகளாக்கும்.

E-Soft கணினி நிறுவனம் தனது வேவையில் வெற்றிகண்டு, தகுதியான கல்விமான்களை உருவாக்க வேண்டுமென மன நிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

ஆற்றலே அறிவு: கல்வியே கண்

**பொன்.ஆழ்வாப்பிள்ளை**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**விவசாயப் பொறியியற்றுறை,**
**விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### "யந்திர உலகத்திலிருந்து தகவல் உலகம்"



உலகம் இன்று யந்திரகாலத்திலிருந்து விலகித் தகவல் தொழில்நுட்ப காலத்திற் காலடியெடுத்து வைத்திருக்கின்றது. தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (Information Communication Technoloy) மிகவும் வேகமாக வளர்ந்துகொண்டே செல்கின்றது. இதற்கு ஒரு முடிவெல்லை என்பது இல்லை. இதன் விளைவுதான் இன்று உலகத்தை ஒரு சிறு கிராமம் என அழைக்கின்றனர். வேகமாக வளரும் இந்தத் தகவல் நுட்பத்துடன் நாமும் இணைந்து செல்லவேண்டும். இணைந்து செல்லாதஇடத்து அந்த உலக ஒழுங்கிலிருந்து நாம் விலக்கப்பட்டு விடுவோம்.

இதன் விளைவை எதிர்நோக்கும் நாம் அதற்குச் சவாலாகக் கணினி அறிவை அதிகளவுக்கு கற்றுக் கொள்ளல் வேண்டும். எமது வாழ்க்கையின் ஒரு அங்கமாகக் கணினி அறிவு பின்னிப்பிணைந்து காணப்படவேண்டும். கௌரவ இலங்கை ஜனாதிபதி இந்த ஆண்டைத் தொழில்நுட்ப ஆண்டு எனப் பிரகடனப் படுத்தியுள்ளார். மேலும் 2017. ஆம் ஆண்டு இலங்கை முற்றுமுழுதாகக் கணினி மயப்பட்ட நாடாகத் திகழும் என்ற நோக்கை அரசு கொண்டிருக்கின்றது.

கணினி கற்பித்தலில் உலகரீதியாகப் புகழ்பெற்ற ESOFT நிறுவனம் தனது சேவையை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரித்ததுடன் குறிப்பாக நெல்லியடியிலும், வடமராட்சிப் பிரதேச மக்களுக்கும் பணிபுரிய வந்தமை, இப்பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். கணினி பட்டதாரியாக ஒருவர் உயர்வதற்குத் தேவையான முழுவசதிகளையும் இலங்கையிலும், வெளிநாட்டிலும் பெறும் வாய்ப்பை இந்த நிறுவனம் உறுதிப்படுத்தும். இவர்கள் சேவை மேலும் மேலும் வளர எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்

**பேராசிரியர் மா. நடராசசுந்தரம்**
**முகாமைக் கற்கையியற்றுறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

### வாழ்த்துச் செய்தி




ESOFT நிறுவனம் தனது கிளையினை நெல்லியடியில் இன்று ஆரம்பிப்பதனையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நவீன விஞ்ஞான யுகத்தில் தகவல் தொழில்நுட்பமானது நாளாந்த வாழ்வில் எமது ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் அத்தியாவசியமாகின்றது. சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை கணினி அறிவினைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலையில் இந்நிறுவனமானது தனது சேவையினைப் பரவலாக்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். கணினிக் கல்வியின் தேவை இன்று மிகவும் உயர்ந்துள்ள நிலையில் இந் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் கற்கை நெறிகள் குறுகியகாலப் பயிற்சி நெறிகளாக இருப்பதுடன், குறைந்த கட்டணத்தினையும், சலுகை அடிப்படையிலான கட்டணத்தினையும் மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதன்மூலம் கூடுதலான மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடியதாகவும் இருக்கும். இந் நிறுவனம் தனது பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல எல்லாம் வல்ல இறைவனின் அருளினை வேண்டி நிற்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
**பிரதேச செயலர், கரவெட்டி.**

ESOFT Computer Studies (Pvt) Ltd.
153, Jaffna Road, Nelliady, Karaveddy.
www.esoft.lk / T.P: 021 2226 4940
(C-3525)

# உலக சமாதானம் மலர



வையை விரிவாக்கம் செய்வதால் அதன் நடவடிக்கைகளில் எந்த விதத்திலாவது முன்னேற்றம் ஏற்படுமா? என்ற கேள்விக்கு பதில் தேடுவதற்கு முன்னாள், இதுவரை ஐ.நா. பாதுகாப்புப் பேரவை சாதித்தது என்ற கேள்விக்கு பதில் தேடுவது அவசிய மாகிறது.

ஏனெனில் இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் சர்வதேச அமைதியைக் காப்பதற்கும் உலக நாடுகளுக்கிடையே நல்லுறவைப் பேணுவதற்கும் உருவாக்கப்பட்டது ஐ.நா.அவை. அதில் இன்று 192 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவை அனைத்தும் ஐ.நா.வின் பொது அவையின் (General Council) உறுப்பினர்கள்.

விவாதிக்கப்படவில்லை ஏன்?

இலங்கையில் நடைபெறும் போர் அந்நாட்டு உள் நாட்டுப் பிரச்சினை மேலும் அதனால் சர்வதேச அமைதிக்கு குந்தகம் ஏதும் ஏற்படவில்லை என்று கூறி அப்பிரச்சினை பாதுகாப்புப் பேரவையில் விவாதிக்கத் தகுதியற்றது என்று சீனா கூற அதனை மற்றொரு வல்லரசான ரஷ்யா. (ரஷ்யாதான் இலங்கை அரசிற்கு கொத்துக் குண்டுகளை வழங்கிய நாடு) ஆதரவளிக்க ஈழத்தமிழர்களின் படுகொலை விவாதிக்கப்படவில்லை. இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் யாதெனில் இலங்கைப்படையினரின் தாக்குதலில் 2009 ஜனவரி இறுதியில் இருந்து மார்ச் மாத இறுதிவரை



வதைபடுத்தப்பட்டு வருவதை தடுத்து நிறுத்தவும் பாதுகாப்புப் பேரவை இன்று வரை முன்வரவில்லை.

ஏனென்றால் இந்தப் பெரிய பிரதர்கள் ஐந்து பேரும் ஒருமித்து ஒப்புக்கொண்டால் தான் உலகில் அது பிரச்சினையாக ஒப்புக் கொள்ளப்படும். இந்த ஒரு உதாரணத்தை மட்டும் வைத்து ஐ.நா.பாதுகாப்புப்பேரவையின்

# ஐ.நா.விடுதலை பெறவேண்டும்

ஐக்கிய நாடுகள் அமைப்பை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரி வரும் இந்தியா , ஐநாவின் உயர் அதிகார அமைப்பான பாதுகாப்புப் பேரவையின் (UN Security Council) நிரந்தர ,தற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா.வின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பினராக ஆதரவு தர வேண்டும் என்ற இந்தியாவின் இந்த நீண்ட கால கோரிக்கைக்கு தற்பொழுது நிரந்தர உறுப்பினர்களாக உள்ள இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியன ஆதரவு தெரிவித்தாலும் ஐ.நா. பொது அவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு அதற்குக் கிட்டவில்லை.

இன்றைய உலகின் பொருளாதார,இராணுவ சமநிலைகளை ஐ.நா. அவை பிரதிபலிக்க வேண்டும் எனின் அதன் பாதுகாப்பு பேரவையின் நிரந்தர உறுப்பினராக வளர்ந்துவரும் நாடுகள் சிலவற்றிற்கும் இடம்தரவேண்டும் என்று இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் ஏற்கனவே கூறியிருந்தார்.

ஆனால் அந்த கோரிக்கையை உலக நாடுகள் சற்றும் கருத்தில் கொள்ளாத காரணத்தினால் இப்போது மற்றொரு ஒரு கோரிக்கையை இந்தியா முன்வைத்துள்ளது. அதன்படி பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேலும் 6 உறுப்பினர்களைச் சேர்த்து [illegible] அதிகரிக்கவேண்டும் என்றும், தற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் மேலும் 4 உறுப்பு நாடுகளைச் சேர்த்து 14 ஆக உயர்த்தி அதன் மூலம் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25ஆக (தற்போது மொத்தம் 15 உறுப்பினர்கள் உள்ளனர்) உயர்த்த வேண்டும் என்று கோரியுள்ளது.

இதற்கு ஐ.நாவின் பல உறுப்பு நாடுகள் தெரிவிக்கும் எதிர்ப்பிற்கும் பதிலளித்துள்ள ஐ.நாவிற்கான இந்தியாவின் நிரந்தர தூதர் ஹர்தீப் பூரி பாதுகாப்புப்பேரவையை விரிவாக்கம் செய்வதற்கு ஆதரவுள்ளதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள ஐ.நாவின் பொது அவையில் வாக்கெடுப்பு நடத்த தயாரா என்று சவால் விடுத்துள்ளார்.

### ஐ.நா. பாதுகாப்புப்பேரவை சாதித்தது என்ன?

ஐ.நாவின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர ...

ஆனால் ஐ.நா. அவையின் நடவடிக்கைகளை தீர்மானிப்பது அதன் உயர் அதிகார அமைப்பான பாதுகாப்புப்பேரவைதான்.இதன் நிரந்தர உறுப்பினர்களாக அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ்,சீனா ஆகியன உள்ளன. இவைகள் மட்டுமின்றி பொது அவையில் இருந்து தேர்வு செய்யப்படும் 10 தற்காலிக உறுப்பினர்களும் உள்ளனர். இந்தப் 15 உறுப்பினர்களைக்கொண்ட பாதுகாப்புப்பேரவையில் அணு



பாதுகாப்புக்கூட்டம்....

ஆயுதங்களைப் பெற்றிருப்பதால் வல்லரசுகளாக நிரந்தரமாக அமர்ந்துள்ள 5 நாடுகள் வைத்தது தான் சட்டம். இந்த 5 நாடுகளுக்கும் வீட்டோ என்று அழைக்கப்படும் இரத்து அதிகாரம் உள்ளது. பாதுகாப்பு பேரவையின் எந்தவொரு பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்றால் அதன் மீது தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றாலும் இந்த 5 நாடுகளும் சம்மதித்தால் தான் சாத்தியம்.

இவற்றில் ஒரு நாடு ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் விவாதிக்கவும் முடியாது. தீர்மானம் நிறைவேற்றவும் முடியாது. அந்த அளவிற்கு ஜனநாயகம் நிலவும் இடம்தான் ஐ.நாவின் பாதுகாப்பு பேரவை.

உதாரணத்திற்குக்கூறவேண்டுமானால் இலங்கையில் நடந்த போரில் தமிழர்கள் நூற்றுக்கணக்கிலும் பின்னர் ஆயிரக்கணக்கிலும் கொன்று குவிந்தபோது அது குறித்து விவாதிக்க அப்போது ஐ.நா. பாதுகாப்புப்பேரவையின் தலைவராக இருந்த மெக்சிக்கோ நாடு ஒரு தீர்மானத்தைக்கொண்டு வந்தது. அதற்கு கோஸ்டா ரீக்கா, ஆஸ்ரியா, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவும் அளித்தனர்.ஆனால்

கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 700 என்ற விபரத்தை உள்ளடக்கிய அறிக்கையை ஐ.நா. அலுவலகமே தயாரித்து (வெளியிடாமல்) வைத்திருந்தது. பல்லாயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது,கொல்லப்படுவது உள் நாட்டுப் பிரச்சினை எப்படி இருக்கிறது ஐ.நா. பாதுகாப் புப்பேரவையின் செயற்பாடு சில வாரங்களுக்குப் பின்னர் ஐ.நா.பொதுச்செயலர் பான்கீமூன் அலுவலகத்தின் தலைமை அலுவலகரான விஜய் நம்பியார் இலங்கை சென்று அங்குள்ள ஐ.நா. அலுவலகம் தந்த படுகொலை விபரங்களை திரட்டிக்கொண்டு வந்தார். முன்பு வந்த கணக்கை விட அது மிக அதிகமாகும். அவர் நியூயோர்க் திரும்பியவுடன் அது குறித்து பாதுகாப்புப்பேரவையில் விவாதிக்க வேண்டும் என்று தற்காலிக உறுப்பினர்கள் கேட்டுக்கொண்ட பின்னரும் சீனாவின் எதிர்ப்பால் அது விவாதிக்கப்படவில்லை.

பாதுகாப்புப்பேரவை உறுப்பினர்களுக்கு தனது பயண விபரத்தை வெளியிட முடியாது என்று விஜய் நம்பியார் கூறியது ஒரு தனிக் கதை.ஆனால் அவர் ஐ.நா.செயலாளர் பான்கிமூன் வசம் அளித்த விபரங்களின் அடிப்படையில் விவாதிக்க முடியாமல் போனதற்கு சீனாவிடம் இருந்த வீட்டோ அதிகாரமே காரணம்.

போர் முடிந்ததாகக்கூறப்பட்ட பின்னர் அங்கு சென்று வந்த ஐ.நா. செயலாளர் பான்கிமூன் தனது அனுபவத்தை பாதுகாப்புப்பேரவையில் (இரகசியமாக) பகிர்ந்து கொண்டதன் அடிப்படையில் கூட எந்த விவாதமும் நடைபெறவில்லை. அதன் பின்னர் மூன்று இலட்சம் தமிழர்கள் முகாம்களில்

நடவடிக்கையை தீர்மானித்துவிட முடியுமா? என்று கேள்வி எழுமாயின் மற்றொரு முக்கிய பிரச்சினைக்கு எப்படி முடிவெடுக்கப்பட்டது என்பதையும் விவாதிக்க வேண்டும்.

### பயங்கரவாதத்திற்கு எதிரான தீர்மானங்கள்

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் மீது விமானங்களைக்கொண்டு மோதி தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அது குறித்து விவாதிக்கக்கூடிய ஐ.நா. பாதுகாப்புப் பேரவை பயங்கரவாதத்தை ஒடுக்க சர்வதேச அளவில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வழி வகுக்கும். தீர்மானங்களை திடீரென்று நிறைவேற்றியது. ஒரே ஒரு தீர்மானம் அல்ல பல தீர்மானங்களை அடுத்தடுத்த வாரங்களில் நிறைவேற்றியது. ஏனென்றால் பாதிக்கப்பட்டது அமெரிக்கா அல்லவா?

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்க இணைந்து செயற்பட வேண்டும் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளை தனிமைப்படுத்த வேண்டும். அதனை ஒடுக்க கடுமையான சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளதென கருதும் இயக்கங்களை தடை செய்யலாம். என்றாலும் இந்த 5 வல்லரசுகளும் ஒன்றிணைந்து தீர்மானம் நிறைவேற்றி மற்ற நாடுகளின் மீது திணித்தனர்.

**தமிழகத்தில் இருந்து தமிழன்**

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் பயங்கரவாதம் என்றால் என்ன என்பது குறித்த வரையறையை இந்த நாடுகள் இதுவரை செய்யவில்லை என்பதே. இப்படி

10ஆம் பக்கம் பார்க்க...)





# பொம்மாயி

நட்சத்திரங்கள்:-புதுமுகம் சுதீப், புதுமுகம் அம்ரிதா,ரக்ஷா ம்றும்பலர்.
இயக்கம்:-ராம்கோபால் வர்மா

மாந்திரீகமும், சூனியமும் மூடநம்பிக்கை, அது நமக்கு நடக்காத வரை... எனும் பயமுறுத்தும் உண்மையையும், தன் வினை தன்னைச் சுடும் எனும் பழகிய பழமொழியையும் சொல்லி வந்திருக்கும் மந்திர - மாயா ஜால திகில் படம் தான் பொம்மாயி.

பிரபல கட்டட ஒப்பந்தகாரர் ராஜீவ்வாக ஹீரோ சுதிப். அவரது மனைவி ஆர்த்தியாக புதுமுகம் அம்ரிதா. இவர்களது ஆசைப் பெண் குழந்தை ரக்ஷா. இவர்களது கட்டுமான கம்பனியில் வேலை பார்க்கும் ஒரு தம்பதி பெரிய அளவில் ராஜீவ்வுக்கு துரோகம் செய்துவிட, அவர்களை அசிங்கப்படுத்தி வேலையை விட்டு தூக்குகிறார் ஹீரோ. பலர் முன்னிலையில் அவமானப்பட்ட ஜோடி, ஹீரோவின் ஆசை மகளுக்கு பில்லி சூனியம் வைக்கிறார்கள். அதனால் அவரது ஆசைமகள் ரக்ஷாவிற்கு உயிர் போகும் ஆபத்தான நிலை. கடவுளை நம்ப மறுக்கும் ஹீரோ, மாந்தீரிகத்தையும் நம்ப மறுத்து மருத்துவத்தை நம்புகிறார். மருத்துவமும் கைவிட,ஹீரோ கடவுளை நம்பினாரா? மகளைக் காப்பாற்றினாரா? நயவஞ்சக ஜோடியை நசுக்கினாரா, இல்லையா ? என்பதற்கு முரட்டு தொனியில் விடை சொல்கிறது மீதிக் கதை !

ஒப்பந்தகாரர் ராஜீவ்வாக தமிழுக்கு புதுமுகம் நாயகர் சுதீப் பாசமான தம்பியாகப் பளிச்சிடுகிறார். அம்மாவாக அம்ரிதாவும் குழந்தைப் பாசத்தால் நம்மையும் கலங்க வைக்கின்றார். ஆவி பிடித்த பெண்ணாகவும், பிடிக்காத பெண்ணாகவும் குழந்தை ரக்ஷாவின் நடிப்பும் திகில் மிரட்டல் பெண் மதன்பாபோ ? எனக் கேட்குமளவிற்கு சிரித்தபடியே வந்து ஹீரோவின் குடும்பத்தை சிதறடிக்கப் பார்க்கும் வில்லியும், அவரது கணவர் முட்டைமுழி, மொட்டைத்தலையரும் வித்தியாச விஸ்வரூபம், வேலைக்காரி, கார் டிரைவர் உள்ளிட்ட சஸ்பென்ஸ் பாத்திரங்களுக்காகவே இயக்குநர் ராம் கோபால் வர்மாவிற்கு சபாஷ் சொல்லலாம்.

சாதாரண சுவரைக்கூட திக்,திக் திகிலாக காட்சிப்படுத்தி இருக்கும் இயக்குநருக்கு, சவீதா சிங்கின் ஒளிப்பதிவும், அமர்மோஹலியின் இசையும், பப்பி துத்துலின் பின்னணி இசையும், சரி விகிதத்தில் கைகொடுத்து சபாஷ் சொல்ல வைக்கின்றன. நம்ப முடியாத கதையை, தனது திரைக்கதை, இயக்கத்தின் மூலம் நம்ப வைத்திருக்கிறார் ராம்கோபால் வர்மா.

பொம்மாயி –மாயாஜால மந்திரக்காரி!

## 'அசலி'ல் ஆட்டம் போடும் சிம்பு




இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கபடவில்லை என்றாலும் காத்துவாக்கில் பல காதுகளை சென்றடைந்து வருகிறது இந்த செய்தி அஜித் நடிக்கும் அசல் படத்தில் சிம்பு கௌரவ வேடத்தில் நடிக்கப்போகிறார் என கூறப்பட்டது. அசல் தயாரிப்பு தரப்பில் மறுக்கப்பட்டு வந்த இந்த செய்தியில் கொஞ்சம் உண்மை இருக்கிறது. அதாவது ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் ஆட்டம் போடப் போகிறாராம் சிம்பு. இப்பாடலை சிம்புவே தனது சொந்தக் குரலில் பாடப்போவதாகவும் சொல்லப் படுகிறது.


அடிப்படையில் அஜித்தின் தீவிர ரசிகர் சிம்பு. அவரது படங்களில் ஒரு சீனிலாவது அஜித் புகழ் பரப்பாமல் இருந்ததில்லை. அந்த வகையில் சிம்புக்குள் ரொம்ப நாளாகவே தல படத்தில் ஒரு சீனிலாவது தலைகாட்ட வேண்டும் என்ற ஆசை இருந்ததாம்.

தனது எண்ணத்தை அஜித்திடம்நேரடியாகவே ஒருமுறைசொல்ல , அசலில் அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்பத்திக் கொடுத்துள்ளாராம் அஜித்.

மலேசியாவில் படப்பிடிப்புக்கள் முடிந்ததும் சிம்பு நடனத்திற்காக சென்னையில் பிரம்மாண்ட செட் போட்டு படமாக்கப் போகிறார்களாம்.

## கமல், ரஜினி படங்களுக்கு கட்டுப்பாடு





கமல், ரஜனி உள்ளிட்ட பெரிய நகடிகர்களின் படங்களை இனி பண்டிகைக் காலங்களில் மட்டுமே பார்க்கமுடியும்.மற்ற தினங்களில் இவர்களின் படங்களை வெளியிட தயாரிப்பாளர்கள் சங்கம் தடைவிதித்துள்ளது.சென்ற மாதம் வரை டப்பிங் படங்களையும் சேர்த்து ஏறக்குறைய நூறுபடங்கள் வெளியாகியிருக்கின்றன. இந்த வருட இறுதிக்குள் மேலும் பல படங்கள் வெளியாகவுள்ளன. இதில் வெற்றிபெற்ற படங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.திரையரங்கு கிடைக்காமல் சுமாராக இருந்தும் மூன்று நாட்கள் மட்டும் ஓடிய படங்களும் இதில் அடங்கும்.

இந்த நெருக்கடியை சமாளிக்க புதிய கட்டுப்பாடு ஒன்றை விதித்திருக்கிறது தயாரிப்பாளர்கள் சங்கம்.இதுகுறித்து சங்கத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வாரத்துக்கு இருநேரடி படமும், ஒரு டப்பிங் படமும் மட்டுமே ரிலீஸ் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள் மற்றும் பெரிய பட்ஜெட்டில் தயாராகும் படங்களை பண்டிகைக் காலங்களில் மட்டுமே திரையிட வேண்டும் என்று அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார். பொங்கல், ஜனவரி 26, ஏப்ரல் 14 , மே 1, ஆகஸ்ட் 15, தீபாவளி ஆகிய பண்டிகைக் காலங்களில் மட்டுமே ரஜினி, கமல் உள்ளிட்ட பெரிய நடிகர்களின் படங்களை ரசிகர்கள் இனிப் பார்க்க முடியும்.

இந்தக் கட்டுப்பாடு வரும் தீபாவளி முதல் அமுலுக்கு வருகிறது.கமலின் உன்னைப் போல் ஒருவன் அதற்கு முன் வெளியாவதால் இந்தப் புதிய கட்டுப்பாட்டால் பட ரிலீஸ் தள்ளிப்போகும் அபாயத்திலிருந்து தப்பித்திருக்கிறது.

## நடிகர் மனோஜின் இயக்குநர் அவதாரம்



இயக்குநர் பாரதிராஜாவின் கலைவாரிசான நடிகர் மனோஜ் தாஜ்மஹால் படத்தில் நாயகனாக அறிமுகமானார். அந்தப் படம் எதிர்பார்த்த அளவுக்கு போடாததுடன் அடுத் தடுத்து மனோஜ் ஹீரோ வேஷம் போட்ட படங்கள் எல்லாம் தோல்விப் படங்கள்.

இதனால் நடிப்புக்கு முழுக்குப் போட்ட மனோஜ் பொம் மலாட்டம் படத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றினார். மணிரத்னம்,சங்கர் உள்ளிட்ட முன்னணி இயக்குநர்களிட மும் இயக்குநர் பயிற்சி பெற்ற மனோஜ் தற்போது இயக்கு நராக அவதாரம் எடுக்கவுள்ளார்.

மனோஜ் இயக்கவுள்ள முதல் படத்தில் நாயகனாக நடிக்க ஆர்யாவிடம் பேசியுள்ளனர். கதையைக் கேட்ட ஆர்யா இயக்குநர் இமயத்தின் மகன் என்பதால் மனோஜிடம் இணைந்து பணியாற்ற டபிள் ஓ.கே. சொல்லிவிட்டாராம்.

## பெற்றோர்கள் சம்மதத்துடன் தான் திருமணம் செய்வேன் – நயன்தாரா பேட்டி



நடிகை நயன்தாரா -நடிகர் பிரபுதேவா ஆகிய இருவரிடையே ஏற்பட்டுள்ள காதல் விவகாரம், தமிழ் தெலுங்கு -மலையாளம் ஆகிய மூன்று மொழி பட உலகிலும் இன்னும் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. பிரபுதேவாவை, நயன்தாரா திருமணம் செய்துகொள்வார் என்று ஒரு தரப்பினரும், இருவரும் திருமணம் வரை செல்ல மாட்டார்கள் என்று இன்னொரு தரப்பினரும் கூறி வருகிறார்கள்.

இந்த நிலையில், ஓணம் பண்டிகையையொட்டி நயன்தாரா அளித்த சிறப்பு பேட்டி வருமாறு,

"நான், படு கவர்ச்சியாக நடிக்கிறேன் என்று சிலர் விமர்சிக்கிறார்கள். கவர்ச்சியாகத்தான் நடிப்பேன் என்று நான் அடம் பிடிக்கவில்லை. தயாரிப்பாளர்கள், இயக்குநர்களின் விருப்பப்படி தான் நடிக்கிறேன். அவர்கள் சொல்வதைச் செய்கிறேன்.

என் வாழ்க்கையில் ஒளிவு - மறைவு இல்லை . யாருக்கும் நான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு ஒருவரைப் பிடித்தால், கடைசிவரை பிடிக்கும். பிடிக்கவில்லை என்றால், பிடிக்கவே பிடிக்காது.

பிரபுதேவா, நல்ல நண்பர் . சிறந்த டான்ஸ் மாஸ்டர். ''மீடியா'' சொல்வது போல் எங்களுக்குள் எதுவும் கிடையாது.

திருமணம் செய்தால், எல்லோருக்கும் சொல்லிவிட்டுத்தான் செய்வேன். என் அம்மா -அப்பா சம்மதத்துடன் தான் திருமணம் செய்துகொள்வேன்.

அவர்கள் விரும்புகிறவரைத் தான் திருமணம் செய்வேன்.என் பெற்றோர்கள் மனம் நோகும்படி, ஒருபோதும் நடந்து கொள்ளமாட்டேன்.

''சூப்பர் ஸ்டார்'' ரஜினிகாந்துடன் நான் நடித்ததை பெரும் பாக்கியமாகவும், அதிர்ஷ்டமாகவும் கருதுகிறேன் என்றார்.

## நேசி



நட்சத்திரங்கள்:- புதுமுகம் விகாஸ், சோனியாசூரி, காதல் சுகுமார் மற்றும் பலர்.
இயக்கம்:- சரவண கிருஷ்ணா

கண்டதும் காதல் கொள்ளும் ஹீரோ விகாஸும், ஹீரோயின் சோனியா சூரி யும், தங்கள் காதலுக்காக எப்படி எப்படி யெல்லாம் போராடுகிறார்கள் என்பது தான் நேசி படத்தின் ஒட்டு மொத்தக் கதையும்.

புதுமுக ஹீரோ விகாஸ், மனநிலை மாறுவதற்கு முன் ஒரு நடிப்பும், மன நிலை மாறிய பின் ஒரு நடிப்பும் காட்டி இரண்டிலுமே பாஸ்மார்க் வாங்கிவிடுகிறார். ஹீரோயின் சோனியா சூரியின் நடிப்பை விட க்ளைமாக்ஸில் அவரது முடிவு பதறவைப்பதுடன், எந்தவொரு காதலுக்கும் இப்படியொரு நிலைவரக்கூடாது என்று ரசிகர்களை சொல்ல வைக்கிறது.

விகாஸ், சோனியா சூரி தவிர பாண்டு, காதல் சுகுமார் உள்ளிட்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால் காதல் இருக்கும் அளவு,காமெடி இல்லாதது மைனஸ். வழக்கம் போல் ஹீரோயின் அப்பா காதலுக்கு வில்லனாகிறார் என்பது தவிர, எதிர்பாராத திருப்பங்கள். நினைத்துக்கூடப் பார்க்க முடியாத க்ளைமாக்ஸ் இவற்றால் நேசி படத்தை நேசிக்க வைத்திருக்கும் இயக்குநர் சரவண கிருஷ்ணாவிற்கு,சிற்பியின் இசை சரியாகக் கைகொடுத்துள்ளது.

நேசி : காதலை எதிர்க்கும் பெற்றோர்களை யோசிக்க வைக்கும்.

# புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளுக்கு மலேஷியாவில் தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சிறுவர் படைப்பிரிவில் இருந்து சரணடைந்த வர்களில் ஏழு பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு மலேஷியாவில் பணியாற்ற அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கு மலேஷியா செல்வதற்கான விமான டிக்கெட்டுக்களும் விசாக்களும் நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்து செயலாற்றி அம்பேபுஸ்ஸ புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 147 இளைஞர்கள் இதற்கு முன்பு மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றம் சட்ட மறுசீராமைப்பு அமைச்சு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து மேற்கொள்ளும் இந் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன் புனர்வாழ்வளிப்பதற்காக இன்னும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் 10 ஆயிரம் பேர் வரையில் இருப்பதாக புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார். (ஓ-6)

# சம்பூர் திட்டத்தில் கைச்சாத்திட இந்திய உயர்மட்ட குழு வருகை

(கொழும்பு)

இந்திய உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பது உட்பட பல்வேறு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் வகையிலேயே இந்த இந்திய உயர்மட்டக் குழு இலங்கை வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய தேசிய அனல் சக்தி நிறுவனம் இந்தத்திட்டத்தின் பொருட்டு 500 மில்லியன் அமெரிக்கடொலர்களை முதலிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# உலக உணவு ஸ்தாபனத்தினூடாக இந்தியா உணவுப் பொருட்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்து முகாம்களில்தங்கியுள்ள மக்களுக்காக வாசனைத் திரவியங்கள் அடங்கிய உணவுப் பொருட்களை இந்தியா உலக உணவு ஸ்தாபனத்தினூடாக அன்பளிப்பு செய்துள்ளது.

உலக உணவுத் ஸ்தாபனம் தனது உள்ளூர் முகவர் நிலையத்துடன் இணைந்து இவற்றை ஐ.நா. மனித உரிமை அமைப்பிடம் கையளித்துள்ளது. இதில் மிளகாய்த் தூள் ,மிளகு, வெந்தயம் உள்ளிட்ட வாசனைத் திரவியங்களும் அடங்குகின்றன.

வாரம் ஒன்றுக்கு 900 மெட்ரிக் தொன் உணவுப்பொருட்களை உலகஉணவுஸ்தா பனம் இடம்பெயர் முகாம்களிலுள்ள 2 இலட்சத்து 70 ஆயிரம் மக்களுக்குத் தற்போது அளித்து வருகின்றது.

இது தவிர மேற்படி முகவர் நிலையம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல திட்டங்களை முன்னெடுத்து ஏராளமான உதவி களை வழங்கி வருகின்றது. பாடசாலை சிறுவ ருக்கு உணவு, தாய் -சேய் நலன் மற்றும் போஷாக்குணவு வழங்கல் போன்றவை அவற்றில் சிலவாகும். (ஓ-6)


## பாரம்பரிய சித்தாயுர்வேத கல்வி

கொல்லிமலை பச்சிலை மூலிகை சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மற்றும் கொல்லிமலை சித்தர் சித்தாஸ்ரமம் குருகுல சித்தமருத்துவ பயிற்சி நிறுவனம் மற்றும் சிதாரா சித்தாயுர்வேத குருகுல சித்தமருத்துவ பயிற்சி நிறுவனம் மூலம் வைத்திய சூரி Dr.P.M.M.சாலின் (JP) கொல்லிமலை சித்தர் ஜோதிலிங்க அடிகளார் Dr.P.M.செல்வராசு அவர்களை தலைமை மருத்துவர்களாகக் கொண்டு அஞ்சல் மூலம் சித்த மருத்துவ பாட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அஞ்சல் வழி மூலம் சித்த மருத்துவம் படிக்க ஆர்வமும் வசதியும் உள்ளவர்கள் தங்களின் சுய விபரக்கோவையுடன் முத்திரை, தபாற்கவர் என்பவற்றினை அனுப்பி கட்டண விபரம் மற்றும் கற்கைநெறி சம்பந்தமான விபரங்களை அறிந்து கொள்ளவும். புதிய வகுப்புகள் ஒக்டோபர் மாதம் நடைபெறவிருப்பதால் பதிவுகளை முற்கூட்டியே பதிந்து கொள்ளவும்.

**சிதாரா ஆயுர்வேத கல்வி நிலையம், புத்தளம் வீதி, சிலாபம்.**

தொடர்புகளுக்கு: 032 222 2773 , 077 7225223, 077 6967649

(3375)



வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற

## திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் அவர்களின் சேவை நலன் பாராட்டுவிழா

இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபம்

காலம் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி



தலைவர்

**திரு.க.தேவராஜா ,**

பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

மங்கள விளக்கேற்றல் : திரு.ச.முத்துலிங்கம்,(முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு.து.சிவராசா (தொழிலதிபர்)

தேவாரம்:திருநெறிய தமிழ்மறைக்கழக மாணவர்கள்

வரவேற்புரை : திரு.க.தர்சன், (தலைவர், இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்)

ஆசியுரை: சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள் - பிரதமகுரு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்,
சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள் - பிரதமகுரு இணுவில் கந்தசுவாமி கோவில்,
திரு.நா.பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற உபஅதிபர்)

பிரதம விருந்திரை திருமதி மதுமதி வசந்தகுமார், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

சிறப்புவிருந்தினர: திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச செயலர், வலி தெற்கு உடுவில்
திருமதி சுலோச்சனா முருகநேசன், செயலாளர், வலிதெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

கௌரவ விருந்தினர்:திரு.வே. விசுவலிங்கம், பிரதித் திட்டப் பணிப்பாளர், மீள் எழுச்சித்திட்டம், மாவ செயலகம்.

வாழ்த்துவோர்:
*திரு.செ.சோதிப்பெருமாள் (இளைப்பாறிய அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)*
*திரு.ஈ.குமரன், (விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)*
*திரு.ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்)*
*திரு.ஏ.இரவீந்திரன் (தலைவர், வாழ்வகம் சுன்னாகம், விரிவுரையாளர்,யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)*
*திரு.தி.கிருபாகரன் (அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி)*
*திரு.சி.குமாரவேல் (தலைவர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்)*
*திரு.க.இரவீந்திரன் (கிராம அலுவலர் J/191 இணுவில் மேற்கு)*

*நன்றியுரை: திரு வை.பிரபாகரன் கிராம அலுவலர் இணுவில் தென்.மேற்கு*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

விநாயகர் அடியார்கள்
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

(3369)


# உலக சமாதானம் மலர....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரையறை செய்யாமல் விட்டதனால் இந்த வல்லரசுகள் இயக்கங்களை மட்டுமல்ல நாடுகளையும் பயங்கரவாதத்திற்கு உதவும் நாடுகள் என்றும் அதற்கு உதவிடும் அரசுகள் என்றும் [illegible] வசதிக் குக் கூறிக்கொண்டு படையெடுத்து தாக்குதலும் நடத்தி வருகின்றனர்.

ஆக,இந்த 5வல்லரசுகளின் வல்லமையே பாகாப்புப் பேரவையை பொறுத்த மட்டில் ஜனநாயகமாக உள்ளது. இவர்களுக்கு இடையே வல்லாதிக்கம் ஐ.நா. அவையின் பாதுகாப்பு பேரவையின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதோடு நிற்கவில்லை. ஐ.நா.வின் பல்வேறு அமைப்புகளையும் கட்டுப்படுத்துகின்றன.

இவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டால் மட்டுமே மனித உரிமை மீறல் போர்க் குற்றம் என்பதெல்லாம் நடைமுறைக்கு வரும்.

அதனால் தான் கொசோவோ நாட்டிற்கு ஒருவராகவும் ஈழத்தமிழனுக்கு அதற்கு மாறாகவும் நடக்கின்றன.

**இங்கே வல்லமை அங்கேலோபி**

ஐ.நா.வின் மனித உரிமை மன்றத்தில் என்ன ஆனது? இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் பல 10 ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை செயற்கைக்கோள் படங்கள் வாயிலாகவும் மற்ற வழிகளிலும் உறுதியாக அறிந்திருந்தும் இலங்கை அரசுக்கு எதிராக மனித உரிமை மீறலையோ அல்லது போர்குற்றத்திற்காகவோ விசாரணை நடத்த (அதுவும் அந்த நாடே விசாரணை நடத்த) தீர்மானம் நிறைவேற்ற முடியவில்லையே எதனால்?

இந்தியா சீனா ஆகிய இரண்டு தெற்காசிய வல்லரசுகளும் தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைக் காப்பாற்றியது மட்டுமின்றி அதற்கு ஆதரவான தீர்மானத்தையும் நிறைவேற்றி தந்தனவே. இதைத் தான் மனித உரிமை அமைப்பின் அலுவலர் ஒருவர் மனித உரிமை மன்றத்தில் எல்லாமே லோபிதான். எனவே அங்கு இலங்கை அரசுக்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் எனக்கு சிறிதளவும் ஆச்சரியம் இல்லை என்று கூறினார்.

ஆக.ஐ.நா.வின் நடவடிக்கை எதுவாயினும் அதனை வல்லரசுகளும் அதன் தோழமைகளும் தான் முடிவு செய்கின்றன. ஐ.நா.வின் அதிகாரத்தை மீறி இந்த வல்லரசுகள் தன்னிச்சையாக முடிவெடுத்து செயலாற்றும் போதும் ஐ.நா.அதனை வாய் மூடி கண்மூடி மௌனம் காக்கிறது. இது தானே ஈராக் மீது நடந்த ஆக்கிரமிப்பு படையெடுப்பு உணர்த்தியது?

இப்படிப்பட்ட ஒரு சூழலில் ஐ.நா. பாதுகாப்புப்பேரவையின் பலத்தை - அதுவும் வீட்டோ அதிகாரத்துடன்- உயர்த்துவதால் உலகிற்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? தங்களுக்கு எதிரான தீர்மானங்கள் எதுவும் பாதுகாப் புப்பேரவையில் நிறைவேற விடாமல் காப்பாற்றிக்கொள்ளவும் தங்களுடைய தோழமை நாடுகளின் மீறல்களை மறைத்து அவைகளைக் காப்பாற்றவும் தான் வழி வகுக்கும். இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் ஐ.நா.வை அது தோற்கடிக்கப்பட்டதன் நோக்கையே கொடுத்து அதனை பயனற்ற அமைப்பாக்கிவிடும்.

உலக அமைதியையும் சர்வதேச உறவுகளின் சமத்துவத்தையும் கொண்டுவர இந்தியாவோ அல்லது மற்ற எந்த நாடுமோ நினைத்தால் அவைகள் முதலில் பாதுகாப்புப் பேரவை எதற்கு என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் உறுப்பினர்களாக உள்ள ஒரு அமைப்பில் சில நாடுகளுக்கு அளிக் கும் திறனை முதலில் பெற்றவை என்பதற்காக அவர்களுக்கு சிறப்பு அதிகாரங்கள் அளிப்பது நியாயம் என்றால் அதே திறனை மற்ற நாடுகளும் பெறுவதற்கு அதுவே காரணமாகதா? (அதனால்தானே அணு ஆயுத சக்தி பெற்ற இந்திய நாட்டையும் வல்லரசு என்று அங்கீகரிக்க வேண்டும் என்றுகோருகிறோம்) அணு ஆயுதப்பரவல் தடுப்பு இன்றுவரை ஏற்றுக்கொள்ளப் படாததற்கு இப்படிப்பட்ட ஒரு தலைப்பட்ச அணுகுமுறை காரணமல்லவா? எனவே ஐ.நா.அவை அது உலக சமாதானத்திற்கு நன்கு பயன் படக்கூடிய ஒரு உயர் அதிகார அமைப்பாக மாற்ற நினைத்தால் அதற்கு முதல் தேவை பாதுகாப்புப் பேரவையை இல்லாமல் செய்வதே.

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப்படும் போதுதன் முடிபை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன்.

– டாக்டர் ஜான்ஸன்

வலம்புரி

# யாழ். குடாநாட்டின் கல்வியில் புரட்சிகரமான மாற்றம் தேவை

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முழுக்கவனமும் இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டை நோக்கியதாகவுள்ளது.

வன்னியில் நடந்த மிகப்பெரும்யுத்தம் வடக்கு மாகாணத்தின் மாவட்டங்களை குறுக்கியுள்ளது.

அதாவது யுத்தம் நடைபெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் முழுமையாகவும் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மக்கள் இல்லாத–பாடசாலைகள் இயங்காத இடங்களாகி போனமையால் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முழுதளவான கண்காணிப்பும் யாழ்ப்பாணத்தை நோக்கியுள்ளது.

இதற்கு மேலாக ஏ–9 பாதை பூட்டப்பட்ட காரணமாகவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதில் சில பல தடைகள் இருந்தன.

ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. இதன் காரணமாக வடக்குமாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் களமமைத்துள்ளனர்.

இவர்களின் வருகை யாழ்ப்பாணக் கல்வியில் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதிலும் பல்வகையான மாற்றங்களை குடாநாட்டு கல்வித்துறையில் ஏற்படுத்துவது வடக்குமாகாண கல்வி அமைச்சின் முதன்மைப் பணியாக அமையும்.

கல்வி சார், கல்விசாரா ஊழியர்களின் நலன்கள் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடத்தும் நடமாடும் சேவை உண்மையில் பாராட்டுக்குரியது.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் கொடிகட்டிப்பறந்த ஊர்ப்பாடசாலைகள் இன்று பெயரளவு பாடசாலைகளாக இயங்கும் பரிதாப நிலைக்கான காரணங்களை கண்டறிவதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு கூடுதலான நேரத்தை செலவிட வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதன் மூலமே குடாநாட்டுப்பாடசாலைகளில் பன்முகத்துவமான கல்வி முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

குடாநாட்டுப்பாடசாலைகளில்கிடையானதும்நிலைக்குத்தானதுமான முன்னேற்றத்தை ஏற்படுத்த யாரேனும் விரும்புவார்களாயின் அவர்கள் பின்வரும் விடயங்கள் குறித்து காத்திரமான கண்காணிப்பை செய்தாக வேண்டும். குறிப்பாக பிரபல்யமான பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது எல்லை கடந்து செயற்படுகின்றன.

இதனால் ஊர்ப்பாடசாலைகள் மெல்லக்கற்கும் மாணவர்களின் தரிப்பிடமாக மாறிவிடுகின்றது.

எனவே பிரபல்யமான பாடசாலைகள் மாணவர்களை சேர்த்துக்கொள்வதில் தூரத்தை கவனத்தில் கொள்வதை கட்டாயமான விடயமாக்க வேண்டும்.

குறிப்பாக ஆரம்பப்பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதில் தூரத்தை கட்டாயம் கவனத்தில் கொள்வதை வலியுறுத்துவது அவசியமாகும்.

இதற்கு மேலாக வகுப்பறையில் இருக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் பிரபல்யமான பாடசாலைகள் சுயாதீனமாக இயங்குவதை காணமுடிகின்றது.

ஒரு வகுப்பறையில் 50 மாணவர்களை அனுமதிக்கும் நிலைமை இருக்குமாயின், இதனை வடக்கு மாகாண கல்வி அமைச்சு கண்டும் கரிசினை கொள்ளாது விடுமாயின் ஊர்ப் பாடசாலைகள் மாணவர்களின் வருகைக்காக காத்திருக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகும்.

இதற்கு அப்பால் டொனேசன், சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன் இணைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இது செம்மையாக மேற்கொள்ளப்படுமாயின் யாழ். குடாநாட்டுக் கல்வியில் காத்திரமான முன்னேற்றத்தை அடையமுடியும்.

# வணங்காமண் நிவாரணப்பொருட்களின் காலாவதி தன்மை தொடர்பாக சிக்கல்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தகவல்

(கொழும்பு)

நலன்புரி முகாம்களில் உள்ள மக்களுக்காக புலம் பெயர்ந்த மக்களினால் அனுப்பப்பட்ட 880 மெற்றிக்தொன் நிவாரணப்பொருட்களின் காலாவதித் தன்மை தொடர்பாக சிக்கல் தோன்றியுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் நாயகம் சுரேன் பீரிஸ் தெளிவு படுத்துகையில்,

கப்டன் அலி கப்பலினால் கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருட்கள் 27 கொள்கலன்களில் அடைக்கப்பட்ட நிலையில் கடந்த யூலை மாதம் 31ஆம் திகதி முதல் கொழும்பு துறை முகத்தில் தேங்கிக்கிடக்கின்றன. இந்நிலையில் கொள்கலன்களுக்குள்ளே காணப்படும் உலர் உணவுப்பொருட்களின் காலாவதி தொடர்பாக கண்டறியவேண்டியுள்ளது.

அப்பொருட்களை மனித பாவனைக்கு உகந்ததா என பரிசோதிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை , மேற்படி நிவாரணப்பொருட்கள் இலங்கை கொழும்பு துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ளதால் களஞ்சியக் கூலியாக ஆகஸ்ட் மாதத்திற்கு மாத்திரமே 6.5 மில்லியன் ரூபாவை துறைமுக அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே நிவாரணப்பொருட்களை காலதாமதமின்றி வவுனியாவுக்கு எடுத்துச் சென்று இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ஓ–6)

# பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களைத் தண்டிக்கக்கூடாது

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்கள் தண்டிக்கப்படக்கூடாது. நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் மட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்படுத்தப்படவேண்டுமென அது தெரிவித்துள்ளது.


1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக ஊடகவியலாளர் திஸ்ஸாநாயகம் மட்டுமே இந்த சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டுள்ளார். யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் ஊடகவியலாளர் தொடர்பான வழக்குகளுக்குச் சாதாரண சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது. (ஓ–6)

# யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கணனி அறிவை மேம்படுத்தும்திட்டம்

தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தின் (IIT) ஏற்பாட்டில் பாடசாலைகளில் தொழில் நுட்பத் தீர்வு எனும் கணனி அறிவை பாடசாலை மாணவர்களிடம் கொண்டு செல்லும் செயற்றிட்டத்தினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு 182 பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி யின் யாழ் .கிளையில் இடம் பெறவுள்ளது.

ஐ.ஐ.ரி யின் கொழும்புக்கிளை பட்டக் கற்கை நெறியில் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பேரேரா பாடசாலை கணனி செயற்றிட்டப்பணிப்பாளர் துசிதா கார்பகே ஆகியோர் ஆரம்ப வைபவத்தின் போது பாடசாலை கணனிக் கற்கை நெறி திட்டம் பற்றி பூரண விளக்கங்களை வழங்கவுள்ளார்கள்.


கல்வி அதிகாரிகள், அதிபர்கள், கணனி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மேற்படி நிகழ்வுக்கு வருகை தந்து ஆண்டு 1 முதல் ஆண்டு 13 வரையான மாணவர்களுக்கு கணனி அறிவைப் புகட்டும்திட்டம்பற்றியபூரணவிளக்கத்தைப்பெற்றுக்கொள்ளும்படி ஐ.ஐ.ரி யாழ் .கிளை கல்விச் செயற்பாட்டுத்திட்டம் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)




# மனித வாழ்வு சிறக்க மனங்கள் திறக்கப்பட வேண்டும்

நூல்களைக் கற்கவில்லையாயினும் கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும்.அஃது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல் போல் துணையாகும்.

அதாவது ஒருவர் கற்றவல்ல நூல்களைப் படிக்கவில்லை என்றாலும் கற்றறிந்தவரிடம் சென்று கேட்டறிய திறந்த மனம்வேண்டும். அப்போது தான் அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியும். இந்த திறந்த மனத்தின் முதல் எதிரி அகங்காரம்.அது ஒருவரிடத்தில் இருக்கும் போது திறந்த மனம் மூடிவிடும்.



தென்றல் காற்றை, புது சுவாசத்தை அனுபவிக்க வேண்டும் என்றால் வீட்டின் ஜன்னல்கள் திறக்கப்படவேண்டும். பூட்டப்பட்டு நெடுநாளான வீட்டில் துர்நாற்றமும் ஒற்றடை பின்னல்களும் தூசும் தான் நிறைந்திருக்கும் . அங்கு இருள் கவிந்து கிடக்கும்.அதாவது மனித வாழ்வு சிறக்க வேண்டும் என்றால் நம்முடைய மனங்கள் திறக்கப்பட வேண்டும்.

## பரமபிதா காட்டிய பாதை

இன்றைய நற்செய்தியிலிருந்து நாம் இதைத்தான் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆம் நாமும் இன்று பல நிலைகளில் சமூகத்தில் பல வகையான கட்டுகளால் கட்டப்பட்டு கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், நாவிருந்தும் ஊமையர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை திறக்க வேண்டும்.

அதாவது வீட்டிற்குள் தென்றல் காற்று வீச வேண்டும் என்றால் ஜன்னல்களை எப்படித் திறந்துவிட வேண்டுமோ அதுபோல நம்முடைய வாழ்விலும் தீமைகள்,தீயகுணம் செயல்கள் நம்கண்முன் வரும்போது இயேசுவின் மதிப்பீடுகளால் தொடப்பட்டு திறக்கப்பட வேண்டும்.

இங்கு பகைமை விலக வேண்டுமாயின் அன்பு என்னும் கதவு திறக்கப்படவேண்டும். அநீதி என்ற கட்டு உடைக்கப்பட வேண்டுமாயின் நீதி என்ற கதவு திறக்கப்பட வேண்டும். பொய்மை என்ற கட்டு அழிய வேண்டுமாயின் உண்மை என்ற கதவு திறக்கப்பட வேண்டும். வன்முறை என்ற கட்டு அழிக்கப்பட வேண்டுமாயின் அமைதி என்ற கதவு திறக்கப்பட வேண்டும். சாதி வெறி என்ற கட்டு உடைக்கப்பட வேண்டுமாயின் மனிதநேயம், மனித மாண்பு எனும் கதவுகள் திறக்கப்பட வேண்டும்.

தட்டுங்கள் திறக்கப்படும். ஆம் இயேசு சொன்னார். இன்று நாம் ஒவ்வொருவரும் நம் உள்ளக்கதவை, மனக்கதவை தட்டுவோம். அப்போது வாழ்வு மலரும். வாழ்வும் சுபம் பெறும்.

அம், இறுகிய மனங்களை இளக வைப்பதும் பூட்டிய மனங்களை திறக்கவைப்பதும் இறைவார்த்தையும் இறையருளுமே . இவ் இறையருளைக் கொண்டு நம்இதயங்களைத் திறப்போம்.

ஜோன் றொபேர்ட்

# பிரகாஷ்ராஜிக்கு தேசிய விருது

சிறந்த திரைப்படங்கள் மற்றும் நடிகர்களுக்கான தேசிய விருதுகள் நாளை திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளன. சிறந்த இதில் நடிகருக்கான தேசிய விருதுக்கு பிரகாஷ்ராஜ் தேர்வாகியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. காஞ்சிவரம் படத்தில் நடித்ததற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது. சிறந்த படத்துக்கான தேசிய விருதையும் இப்படம் தட்டிச் செல்கிறது. மொத்தம் இரண்டு விருதுகள் கிடைக்கின்றன.



காஞ்சிவரம் படத்தை பிரியதர்ஷன் இயங்கியுள்ளார்.

ஏற்கனவே சர்வதேச பட விழாக்களில் காஞ்சிவரம் படம் திரையிடப்பட்டு பாராட்டுகளையும் விருதுகளையும் குவித்துள்ளது. 2008 செப்டம்பர் டொரண்ட் டோவில் நடந்த

பாரதச் செய்திகள்

திரைப்படவிழாவில் திரையிடப்பட்டு விருது வென்றது.

சுதந்திரத்துக்கு முன்பு காஞ்சிபுரம் பகுதியில் வாழ்ந்த நெசவாளர் குடும்பங்களின் கஷ்டங்களை சித்தரிக்கும் கதையே இப்படம். பிரகாஷ்ராஜ் தந்தை பாத்திரத்தில் நடித்துள்ளார்.

ஆங்கிலேயர்களிடம் கூலிக்கு நெசவுத் தொழில் செய்யும் அவர் மகள் திருமணத்துக்காக ஒரு பட்டுச் சேலை சொந்தமாக செய்யப்படும் அவஸ்தைகளை நடிப்பில் வெளிப்படுத்தி இருந்தார்.

வேலை பார்க்கும் நெசவு கூடத்தில் இருந்து மகளுக்கு பட்டுச்சேலை தயார் செய்ய தினமும் ஒரு பட்டு நூலை வாய்க்குள் ஒளித்து வைத்துக்கொண்டு வருவது கடைசி நூலை எடுத்து வரும்போது காவலாளிகளிடம் சிக்கி பொலிஸில் மாட்டுவதும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளுமே இப்படத்தின் கதை.

பிரகாஷ்ராஜுக்கு இது மூன்றாவது தேசிய விருது ஆகும். (ஓ-6)

# ஏர் – இந்தியா விமானத்தில் தீ
## 213 பயணிகள் உயிர் தப்பினர்

(மும்பை)

மும்பையில் இருந்து ரியாத்திற்கு புறப்பட்ட ஏர் – இந்தியா விமானத்தில் தீ பிடித்தது. இருப்பினும் அதிலிருந்த 213 பயணிகள் மற்றும் 16 பணியாளர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.



மும்பை சர்வதேசவிமானநிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 10.50 மணி அளவில் ஏர் -இந்தியா விமானம் ஒன்று ரியாத்திற்கு புறப்பட்டது.

விமானம் ஓடு பாதையைக் கடந்து மேலே எழவிருந்த நேரத்தில் அதன் என்ஜின் ஒன்று தீ பிடித்தது. உடனடியாக விமானம் நிறுத்தப்பட்டது. என்ஜினில் பிடித்த தீ உடனடியாக அணைக்கப்பட்டதோடு விமானத்தில் இருந்த 123 பயணிகள் மற்றும் 16 பணியாளர்கள் விமானத்தில் அவசரகால வழி வழியாக தரையிறக்கப்பட்டனர்.

விமானம் ஒரு ஓரமான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிறுத்தப்பட்டது. விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளும் பத்திரமாக இருப்பதாகவும் அவர்கள் மற்றொரு விமானம் மூலம் ரியாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் ஏர் - இந்தியா நிறுவன தகவல் தொடர்பாளர் கூறினார். தீ விபத்திற்கான காரணம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. (ஓ-6)

# இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாக வாழ மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்
## என். வரதராஜன் வலியுறுத்து

இலங்கை தமிழர்கள் சுதந்திரமாக வாழ மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் என். வரதராஜன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து திருவாரூரில் உரையாற்றிய அவர், இலங்கையில் உள்நாட்டு போர் முடிபுக்கு வந்து பல மாதங்களாகியும், இன்றும் தமிழ் மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப அனுமதிக்கப்படவில்லை. இந்த மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் ஆளும் அதிகாரவர்க்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தி அவர்கள் சுதந்திரமாக வாழ மத்திய அரசு வழியை ஏற்படுத்த வேண்டும் என்றார். (ஓ-6)

# மும்பையில் மழையால் நிலச்சரிவு
## 12 பேர் பலி ; 25 பேர் படுகாயம்

மும்பையில் பெய்த பலத்த மழையால், புறநகர்ப் பகுதியில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் இரண்டு வயதுக் குழந்தை உட்பட 12 பேர், மண்ணுக்குள் புதைந்து பரிதாபமாக இறந்தனர். 25 பேர் காயமடைந்துள்ளனர். பலத்த மழை காரணமாக ரயில்போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் கடந்த சில நாட்களில் பலத்த மழை பெய்து வருகிறது. கடந்த வியாழக்கிழமை இரவு புறநகர்ப் பகுதிகளில் மழை வலுத்து வாங்கியது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பெருமளவு தேங்கி யது.


புறநகர்ப்பகுதியான சாகி நாகாவில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி நகர் குடிசைப்பகுதியில், பலத்த மழை காரணமாக, நள்ளிரவில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இங்கிருந்து 20க்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்தன. மீட்புக் குழுவினர் உடனடியாக, சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

இரவு முழுவதும் ஏராளமான தீயணைப்பு வாகனங்கள் மீட்புப்பணியில் ஈடுபட்டன. அம்புலன்ஸ்களும், தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. மண்ணுக்குள் புதைந்திருந்த பலரை, மீட்புக்குழுவினர் பத்திரமாக மீட்டனர். இருந்தாலும், நிலச்சரிவில் சிக்கி, இரண்டு வயதுக்குழந்தை உட்பட 12 பேர் பரிதாபமாக பலியாயினர். 25க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர். அவர்கள் ராஜவாடி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்தில் தொடர்ந்து ... பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்றும், இதனால் உயிரழிப்பு அதிகரிக்கக்கூடும் என்றும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், காய மடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் இழப்பீடாகத் தருவதாக, மகாராஷ்டிர அரசு அறிவித்துள்ளது. (ஓ-6)

# வைகோ, திருமா, விஜயகாந்த் புலிகளிடம் இருந்து பணம் பெற்றுள்ளனர்
## அதற்கான ஆதாரம் உள்ளது என்கிறார் சுப்பிரமணியசுவாமி



வைகோ, திருமாவளவன், விஜயகாந்த் ஆகியோர் விடுதலை புலிகளிடம் இருந்து பணம் வாங்கியதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, தேமுதிக தலைவர் விஜயகாந்த் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஆகியோர் விடுதலைப்புலிகளிடம் இருந்து பணம் பெற்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளி டம் இருந்து இவர்கள் பணம் பெற்றதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது.

நான் சொல்லுவதை மறுத்து வைகோ, திருமாவளவன், விஜயகாந்த் ஆகியோர் வழக்கு தொடர்ந்தாலும் அதை சந்திக்க நான் தயார். விடுதலைப் புலிகளிடம் இருந்து பணத்தை எப்படி பெற்றார்கள். யார் மூலம் பெற்றார்கள்.

இதற்கு கனடாவில் உள்ள ஒரு நபர் உதவியிருக்கிறார். அதற்கான சாட்சியும் என்னிடம் இருக்கிறது. தேவை வரும்போது அதை வெளியிடுவேன் என்றார். (ஓ-6)

# நளினிக்கு சிறையில் முதல்வகுப்பு வழங்க நீதிமன்றம் உத்தரவு



ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நளினிக்கு சிறையில் முதல் வகுப்பு வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நளினி தனக்கு சிறையில் முதல் வகுப்பு வழங்க கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுவில் எனக்கு 1992 முதல் 98 வரை சிறையில் முதல் வகுப்பு வழங்கப்பட்டிருந்தது.

பின்னர் விலக்கி கொள்ளப்பட்டது. நான் எம்.ஏ., எம்.சி.ஏ. படித்துள்ளேன். எனது படிப்பின் அடிப்படையில் எனக்கு சிறையில் முதல் வகுப்பு தர உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனு தடா வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி, "நளினிக்கு சிறையில் முதல் வகுப்பு தர வேண்டும்" என்று வேலூர் சிறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டார். (ஓ-6)

# இலங்கை அகதிகளுக்கு இலவச திருமணம்

(சென்னை)


சென்னையில் 5 ஜோடி இலங்கை அகதிகளுக்கு இலவச திருமணம் செய்து வைத்து வித்தியாசமாக திரைப்பட பட பூஜை தொடங்கப்பட்டது.

மீடியாவிஷன் தயாரிப்பில் நாயகன் அகில், புதுமுகம் அனுஜா நடிக்கும் நந்தி படத்தின் பூஜை இன்று (வெள்ளிக்கிழமை) வடபழனி கிரீன்பார்க் ஹோட்டலில் நடைபெற்றது.

படத்திற்காக பிரமாண்டமான அழைப்பிதழ்கள் எதுவும் இல்லாமல் பிறருக்கு பயன்படும் வகையில் திருவள்ளூர் மாவட்டம் புழல் அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களில் 5 ஜோடிகளை தேர்வு செய்து அவர்களுக்கு இலவச திருமணம் செய்து வைத்து பட பூஜையை நடத்தினர்.

எடிட்டர் மோகன், அவரது மனைவி வரலட்சுமி, இயக்குனர் பாக்கியராஜ், நடிகை பூர்ணிமா, இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார், இயக்குனர் எழில் ஆகியோர் மணமக்களுக்கு தாலியை எடுத்துக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தனர்.

படத்தின் தயாரிப்பாளர் மீடியா விஷன் சார்பில் தம்பதிகளுக்கு சீர்வரிசையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான திரைப்பட துறையினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். (ஓ-6)





நோர்த் லங்கா ஐ.ஐ.ரி. நிறுவனத்தின் பி.எஸ்சி மல்ரிமீடியா கற்கைநெறிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் நிறுவனப் பணிப்பாளர் பொ.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும் நோற்றிங்காம் கல்லூரியின் லண்டன் நிறுவனத்தின் பணிப்பாளர் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதையும் அனுமதி பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இங்கிலாந்து அணியை போராடி வீழ்த்தியது அவுஸ்திரேலிய அணி

(லண்டன்)

பேர்ஹயூசன்,ஜோன்சனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போராடி வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரிலும் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடுகின்றது.

இதில் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றிய நிலையில் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பமே சறுக்கியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பேய்ன் பூச்சி யத்துடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 3 ஓவர்களில் 11 ஓட்டங்கள் எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

இந் நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த வோட்சன்-வைற் ஜோடி சிறப்பான இணைப்பை வழங்கி அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தது.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 82 ஓட்டங்களை எடுத்த போது வோட்சன் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் கிளாக் களமிறங்க மறுமுனையில் அரைச்சதம் கடந்த வைற் 71 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 24.2 ஓவர்களில் 111 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டையுமிழந்தது.

எனினும் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த மைக்செல் கிளார்க் -பேர்ஹயூசன் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி கௌரவமான இலக்கை எட்டியது.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித் தலைவர் மைக்கெல் கிளார்க் 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மைக்கெல்ஹசி களமிறங்க மறுமுனையில் பேர்ஹயூசன் தனது அரைச்சதத்தை பூர்த்திசெய்ய அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களைக்கடந்தது.

இதில் மைக்கல் ஹசி 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.அடுத்து 6 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த பேர்ஹயூன்-ஹோப்ஸ் ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 260 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பேர்ஹயூசன் 75 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட)71 ஓட்டங்களையும் ஹோப்ஸ் 11 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 18 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹொலிங் வூட் 2 விக்கெட்டுக்களையும்,சைட் பொத்தம் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 261.ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் அணித் தலைவர் ஸ்ரொரஸின் விக்கெட்டையிழந்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஸ்ரொரஸ் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 4.3 ஓவர்களில் 22 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பொப்ரா-பிறிர் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இங்கிலாந்து அணி 10.3 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது பிறிர் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஷா களமிறங்க மறு முனையில் பொப்ரா 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 28.3 ஓவர்களில் 124 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டையுமிழந்தது.

தொடர்ந்து ஷா 40,கொலிங்வூட் 23, பிரோட் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 41.3 ஓவர்களில் 178 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்நிலையில் ஜோடி சேர்ந்த ரைட்- ரஷீட் ஜோடியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 44 ஓவர்களில் 200 ஓட்டங்களைக்கடந்தது.இதில் ரைட் 27 பந்துகளில் (4 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட)38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 46.4 ஓவர்களில் 224 ஓட்டங்களை எடுத்து 7ஆவது விக்கெட்டையுமிழந்தது.தொடர்ந்து களமிறங்கிய சுவான் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இந்நிலையில் ஜோடி சேர்ந்த ரஷீட்-சைட்பொத்தம் ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தினை வழங்கிய போதும் இங்கிலாந்து 50 ஓவர்களில் 8விக்கெட்டையிழந்து 256 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4ஓட்டங்கள் வித்தியாசத்தில் போராடித் தோல்வியடைந்தது.

இதில் ரஷீட் 23 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட)31 ஓட்டங்களையும் சைட்பொத்தம் 7 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட)13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.



பந்துவீச்சில் ஜோன்சன் 7 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்க ளையும், பிரெட் லி, ஜோன்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் அவுஸ்திரேலி அணியின் வெற்றிக்கு அடித்தளமமைத்த பேர்ஹயூசன் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# சர்வதேச ஒருநாள் போட்டி; சச்சின் புதிய 'போர்முலா'

(மும்பை)

ஒரு நாள் போட்டியை காப்பாற்ற இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆலோசனை தெரிவித்துள்ளார். இதன்படி மொத்தம் உள்ள 100 ஓவர்கள் 25 ஓவர்கள் வீதம் நான்கு இன்னிங்ஸாக பிரிக்கப்படும். ஒவ்வொரு அணியும் தலா25 ஓவர்கள் என மாறிமாறி விளையாட வேண்டும்.

கிரிக்கெட் அரங்கில் இருபது-20 எழுச்சியால் டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.இதனை மீட்க இந்திய அணியின் சாதனை நாயகன் சச்சின் முதன் முறையாக போர்முலா ஒன்றை அறிவித்துள்ளார்.

இது குறித்து சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது;

என்னைப் பொறுத்தவரை 50 ஓவர்கள் போட்டிக்கு தான் எப்போதும் ஆதரவு அளிப்பேன். இப்போட்டியின் விறுவிறுப்பை அதிகரிக்க 25 ஓவர்களாக பிரித்து விளையாடலாம். கடந்த 2002 இல் இலங்கையில் நடந்த சம்பியன்ஸ் தொடரின் போது தான் இந்த எண்ணம் ஏற்பட்டது.

இதன் இறுதிப் போட்டியில் இலங்கை அணி 50 ஓவர்கள் விளையாடியது.பின்னர் இந்திய அணி 2 ஓவர்கள் விளையாடிய நிலையில் மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அடுத்த நாள் மீண்டும் புதிதாக போட்டி நடந்தது.அப்போதும் இலங்கை அணி 50 ஓவர்கள் விளையாடியது.இந்தியா 8.4 ஓவர்கள் விளையாடிய நிலையில் மீண்டும் மழை குறுக்கிட இரு அணிகளும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இப் போட்டியில் ஒட்டுமொத்தமாக 110 ஓவர் விளையாடிய போதும் முடிபு கிடைக்கவில்லை. அந்த நேரத்தில் தான் 25 ஓவர்களாக பிரித்து விளையாடும் ஐடியா தோன்றியது.

### நான்கு இன்னிங்ஸ்

இதன்படி முதலில் ஒரு அணி 25 ஓவர்கள் விளையாட வேண்டும். பின்னர் அடுத்த அணி 25 ஓவர்கள் விளையாட வேண்டும். இதே போல் நான்கு இன்னிங்ஸ் மாறி மாறி விளையாட வேண்டும். இம் முறையில் நிச்சயமாக முடிபு கிடைத்து விடும். தவிர நாணயச்சுழற்சியில் வெல்லும் அணிக்கே அதிக வெற்றி வாய்ப்பு என்ற நிலையும் மாறும். 25 ஓவர் வீதம் விளையாடும் போது ஒரு அணிக்கு மட்டுமே சாதகமாக சூழ்நிலை இருக்காது.

உதாரணமாக பகலிரவு போட்டி என்றால் இரு அணிகளுமே மின்னொளியில் துடுப்பாட்டம் செய்ய நேரிடும். எனது போர்முலாவை கிரிக்கட் நிர்வாகிகள் கடைப்பிடித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும்.அடுத்து இலங்கையில் நடக்க உள்ள முத்தரப்பு சம்பியன் தொடர் போட்டிகளுக்கு இந்திய அணி தயாராக உள்ளது. இவ்வாறு சச்சின் கூறினார்.

### கபில் சவால்

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில் தேவ் விடுத்த சவாலில் ஜெயித்துக்காட்டியதாக சச்சின் தெரிவித்தார்.கடந்த 20 ஆண்டுகளாக விளையாடிவரும் இவர்; டெஸ்ட் (159 போட்டி12 773 ஒட்டம்,42சதம்),ஒரு நாள் போட்டிகளில் (425 போட்டி, 16 684 ஓட்டம்,43சதம்) அதிக ஓட்டம், சதம் எடுத்துச் சாதித்துள்ளார்.

கபில்தேவ் விடுத்த சவால் குறித்து சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது;




பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அறிமுகமான போது என்னைப் பார்த்து கபில் தேவ், 10 ஆண்டுகள் சர்வதேச போட்டிகளில் விளையாடினால்தான் ஏதாவ து சாதித்ததாக கூற முடியும் என்றார். இந்த சவாலை ஏற்றுக்கொண்ட நான் 20 ஆண்டுகள் விளையாடி இரு மடங்கு சாதனையை படைத்துள்ளேன்.

டெஸ்டில் 15 ஆயிரம் ஓட்டம் தான் எனது இலக்கு என்று விஸ்டன் இதழுக்கு ஒரு போதும் பேட்டி கொடுக்கவில்லை.

15 ஆயிரம் ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என கவாஸ்கர் கூறியதாகத்தான் சொன்னேன். அதை மாற்றி வெளியிட்டு விட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

**COMPUTER CLASSES**

அனைத்துப் பாடங்களுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

**CERTIFICATE IN INTERNET & E-MAIL**

Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Net Calling என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

குறைந்த கட்டணத்தில் அதி கூடிய செய்முறை பயிற்சிகள்.

(C-3253)

**DURATION 2 WEEKS, Rs. 1000/=**

**INTERNET BROWSING: 1 hrs 80/=**

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel, Fax: 2224459, 4460, 0774192275


# டோக்கன் பெற இரவு 10 மணி...

பயணிகளை ஏற்றிக்கொண்டு வவுனியாவுக்கு வந்து மீண்டும் அங்கிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத் திற்குச் செல்கின்றன.

இந்த பஸ் வண்டிகளில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள் வவுனியா கண்டிவீதியில் அமைந்துள்ள ரம்யா ஹவுஸ் இராணுவ அலுவலகத் தில் அனுமதி பெறவேண்டும். இந்த அனுமதியைப்பெறு வதற்காக தினசரி 500 நம்பர்கள் காலையி லேயே டோக் கனாக வழங்கப்படுகின்றன.

இந்த டோக்கன் பெறாதவர்கள் தமது யாழ்.பயணத் திற்கான அனுமதியைப்பெற முடியாது என்பதால் இந்த டோக்கன்களை பெறுவதற்காக மக்கள் முண்டியடிப் பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நெரிசல் காரண மாக டோக்கனைப் பெறுவதற்காக இரவு பத்துமணிக்கேகியூ வில் சென்று காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ளவர்களும் இரவுரயிலில் வந்து வவுனியாவில் அதிகாலையில் இறங்குபவர்களும் இவ்வாறு இந்த டோக்கனைப்பெறுவதற்காக மிகவும் சிரம மடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவிலேயே கியூவிற்குச் சென்று காவலிருந்து டோக்கனைப் பெறுகின்ற சிலர் அவற்றை 500, 1000 ரூபா வுக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தினரிடம் பிரயாண அனுமதியைப் பெறுவ தற்காக நூற்றுக்கணக்கில் இங்கு பல மணித்தியாலங் கள் காத்தி ருக்கின்ற பொது மக்களுக்கு உரிய மலசல கூட வசதிகளும் இல்லாததனால் பெரும் சிரமங்களுக்கு அவர்கள் உள்ளாக நேரிடுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. முதல்நாளிரவு கொழும்பில் இரவு தபால் ரயி லில் ஏறி மறுநாள் அதிகாலை வவுனியாவை வந்தடை யும் பயணிகளின் நிலைமை இதனால் மிகவும் மோசம் எனவும் கூறப்படுகின்றது.

இதைவிட வவுனியா நகரில் இருந்து இந்த ரம்யா ஹவுஸ் இராணுவ அலுவலகத் திற்குச் செல்வதற்காக முச்சக்கர வண்டியைப் பயன்படுத்துகின்ற பயணிகளிடம் முச்சக்கர வண்டிகாரர்கள் 150, 200 ரூபாய் என கட்டணம் வசூலிப்பதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# சனல்-4 வீடி...

நோர்வே அமைச்சரும் சமாதானப் பேர்ச்சுவார்த்தை களில் முக்கிய பங்காற்றிய வருமான எரிக் சொல் ஹெய் தற்போது அது பொய்யான வீடியோ எனக் கூறியுள்ளார். இந்த படுகொலை காட்சிகள் குறித்து பான் கீ மூனு தான் பேச இருப்பதாகவும், இது ஒரு போர்க் குற்றம் எ வும் கடுமையான விமர்சனங்களைத் தெரிவித்து தார் எரிக் சொல்ஹேய்ம்.

இராணுவப் படையினர் சித்திரவதை மேற் கொள் வதாக வெளியான செய்திகள் ஜோடிக்கப்பட்டவை எ பதனை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொண்டுள் தாக பாது காப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவித்து ளார். இந்த வீடியோ காட்சிகள் போலியானவை என ஐக் கிய நாடுகள் அமைப்பும் குறிப்பிட்டுள்ளதென கோத்த பாய சுட்டிக்காட்டியுள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி சேவையின் நடவடிக் கைகள் தொடர்பில் விசாரணை நடத் தப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் சர்வதேச அமைப்புக்கள் அது குறித்து விசாரணை நடத்தும் எனவும் பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுத லைப் புலிகளுக்கு ஆதரவான சில அமைப்புக்கள் தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு சேறு பூசும் பணிகளை தொடர்வதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரி வித்துள்ளார். (ச-5)

# மனித உரி...

தெரிவித்துள்ளார். இவை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

அவர்களின் சந்திப்பின் போது நான் அங்கு இருக்கவில்லை அதன் பின்னர் நான் ஐ.நா.பொதுச்செயலரைச்சந்திக்கவும் இல்லை. சில நிராயுத பாணிகளை இலங்கைப் படை யினர் சுட்டுக்கொன்றதாகக் கூறப்படும் விவகா ரம் தொடர்பாக பேசினார்கள் என்பது பற்றி எல் லாம் எனக்குத் தெரியாது. இவர்களது சந்திப் புக் குறித்த முழுவிபரங்கள் எனக்குக் கிடைக்க வில்லை. ஆனால் அந்த வீடியோவை நான் பார்த் தேன். அது மிகவும் கவலையளிப்பதாக இருந்தது என்றார்.

வீடியோக்காட்சி விவகாரம் தொடர்பாக பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகளின் கருத் தை முழுமையாக அறியும் வாய்ப்பு முழு மையாகக்கிடைக்கவில்லை என்றார். (ச-5)

# உரிமை...

இல்லை எனவும், அவற்றை மீள இயக்கும் பொரு ட்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படுவ தாக வும் மத்திய வங்கியின் அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். இது ஒரு பாதுகாப்பு முன்னேற்பாடு என வும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் வங்கியின் தமது கணக்கு தொடர் பில் யாருக்கும் உரிமை கோரிபுதுப் பிக்க முடியும் எனவும் கடந்த 10 வருடங்களாக உரிமை கோரா மல் தகவல் பதிவுகள் இடம்பெறாத வங்கி கணக் குகளே இந்தத் திட்டத்தின் கீழ் உட்கொண்டு வரப்படவிருப் பதாக மத்திய வங்கி தெரிவித்துள் ளது. (ச-5)

# இலங்கையுடன் அணுத் தொழி...

இது தொடர்பான சாத்திய ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு வருமாறு இந்திய அணு சக்தி விஞ்ஞானிகளுக்கு தான் அழைப்பு விடுத் திருப்பதாகவும் தெரிவித்த அவர், இலங்கை யின் தென் கரையோரப் பகுதிகளில் தாராள மாகக் காணப்படும் தோரியத்தை பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வது தொடர்பா கவே இந்தியத் தரப்பினருடன் ஆராய இருப் பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேற்கொள்ளப் படவிருக் கும் சாத்திய ஆய்வில், இதற்கான செலவீனம், அணு பொருட்களைப் பயன்படுத்துவதில் உள்ள பாதுகாப்புப் பிரச்சினை, கழிவுகளை பாதுகாப் பாக அகற்றல் என்பன தொடர்பாகவும் ஆராயப் படும் எனத் தெரிவித்த அமைச்சர் திஸ்ஸ வித ரண, இது தொடர்பாக இந்தியத் தரப்பினருடன் தான் பயனுள்ள பேச்சுக்களை ஜெனீவாவில் மேற்கொண் டதாகவும் தெரிவித்தார்.

தோரியத்தை மின்சக்திக்கான பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்துவதில் இலங் கைக்கு உதவுவதற்கு இந்தியா தயாராக இரு ப்ப தாகத் தெரிவித்த அமைச்சர், அணுசக் தியை உற்பத்தி செய்வதில் இந்தியா தோரியத் தை வெற்றி கரமாக பயன்படுத்தி இருப்பதால், அது தொடர்பான தொழில்நுட்ப த்தை இலங் கையுடன் பகிர்ந்து கொள்வதற்கு அந்நாடு முன் வந்திருப்பதாகவும் தெரிவித்தார். (ச-5)

# தினமும் 40 பாரவூர்தி...

பாரவூர்திகளில் ஒரு தொகுதி பாரவூர்திகள் மட்டும் சில காரணங் களினால் பதிவு நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் வழமையான சேவை யில் ஈடுபட்டு வரும் பாரவூர்திகள் தமது சேவை யினை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின் றன என்பதை தங்களுக்கு அறியத்தருகின் றேன்.

தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடாத பார வூர்திகள், முறைகேடான முறையில் சேவை யில் ஈடுபட்ட பாரவூர்திகள், பாரவூர்திகளிற்கான கட்டணம் அதிகரிப்பால் வாடகைக்கு அமர்த் தப்படாத பாரவூர்திகள் போன்ற காரணங்களி னாலேயே பாரவூர்திகள் பதிவு நீக்கம் செய் யப்பட்டுள்ளன.

பதிவு நீக்கம் செய்யப்பட்ட பாரவூர்திகள் தவிர யாழ். மாவட்ட மக்களின் அன்றாட தேவை களின்னைப் பூர்த்தி செய்வதற்கு ஏது வாக தற்போது ஏ-9 பாதையூடாக தினமும் சராசரி 40 பாரவூர்திகளில் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. இவற்றில் கணிச மான பொருட்கள் கொழும்பு விலையில் விற் பனை செய்யப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாரவூர்தி உரி மையாளருக்கு சந்தர்ப்பம் வழங்கும் பொரு ட்டு 180 பாரவூர்திகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் 142 பாரவூர்திகளுக்கான அனுமதி வடமாகாண ஆளுநரினால் சிபார்சு செய்யப் பட்டு பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியல் அத்தியாவசிய சேவை ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க திணைக்களங்கள்-18, ப.நோ.கூ. சங்கங்கள்-19, யாழ்.வணிகர் கழகம்-25, தனியார் பாரவூர்திகள் உரிமையாளர் கூட்டுற வுச்சங்கம்-80 ஆகிய 142 பாரவூர்திகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பாரவூர்திகள் யாழ். மாவட்டத்திலிருந்து ஏ-9 தொடரணி சேவையினை மேற்கொள் வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஏ-9 பாதையூடாக பொருட்கள் எடுத்து வரப்பட்ட திகதி முதல் இன்றுவரை 2ஆயி ரத்து 473 பாரவூர்திகளில் யாழ். மாவட்டத் துக்குத் தேவையான பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணத்திலிருந்து பாரவூர்திகளில் உள்ளூர் உற்பத்திப் பொருட் கள் மற்றும் ஏனைய பொருட்கள் வெளிமாவட் டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துடன் இணைந்து 13 குளிரூட்டி வாகனங்களில் இதுவரை 41 குளிரூட்டிகளில் கடலுணவு நேரடியாக வெளிமாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் அநுராத புரத் திலிருந்து ஐஸ் கொண்டு வருவதற்கான நட வடிக்கையும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திற் கானஏ-9பாதையூடான பொருட்கள் போக்கு வரத்து சீராகவுள்ள காரணத்தினால் மாவட் டத்தில் எந்தவித தட்டுப் பாடு ஏற்படு வதற்கு இட மளிக்கப்பட மாட் டாது என்பதையும்தெரி வித்துக்கொள்கிறேன் எனஅரசஅதிபரின்செய் திக்குறிப்பில்தெரிவிக்க ப்பட்டுள்ளது. (ச)




| SUBWOOFER | |
|---|---|
| SSD 2.1 | 2000/- |
| SSD 4.1 | 4500/- |
| Microlab 5.1 | 5700/- |
| Creative 5.1 | 6700/- |
| **SCANNER** | |
| Mustek | 5500/- |
| HP 2410 | 7500/- |
| HP G 3110 | 13900/- |
| **MONITOR** | |
| LCD 15" | 10750/- |
| LCD 16" | 13400/- |
| LCD 19" | 15750/- |
| CRT 15" | 8250/- |
| **RAM** | |
| SD RAM 256 MB | 1000/- |
| RAM DDR I 256 MB | 1700/- |
| RAM DDR II 512 MB | 1200/- |
| **UPS** | |
| Techcom 650 W | 3900/- |
| DCP 650 W | 3900/- |
| Intex 600 W | 4000/- |
| PowerTree 650 W | 4500/- |
| UPS 1.2 KV 1200 W | 8400/- |
| **HARD DISK** | |
| 160 GB SATA | 5300/- |
| 500 GB SATA | 7750/- |
| **VGA CARD** | |
| AGP 32 MB | 1900/- |
| AGP 65 MB | 2250/- |
| AGP 256 MB | 5250/- |
| PCI Express ATI 512 MB (Radeon) | 3250/- |
| **MOTHER BOARD** | |
| Foxconn G31 | 5600/- |
| Asus P5KPL-AM | 6500/- |
| Intel DG31 PR | 7300/- |

COMPUTER TABLE 2750/-

| PRINTER | |
|---|---|
| HP D 1560 Colour | 4300/- |
| Canon IP 1980 | 5000/- |
| LaserJet | 12900/- |
| HP 4355 All in One (Printer, Scanner, Copier, Fax) | 13900/- |
| **PROCESSOR** | |
| Intel Pentium 2.8 Ghz | 6000/- |
| Intel Pentium 2.2 Dual Core | 8200/- |
| Intel Pentium 2.5 Dual Core | 8900/- |
| Intel Pentium 2.8 Core2Duo | 14750/- |

WEB CAMERA 990/-

PROLINK Broadband 3.5 G USB HSDPA Modem (SIM) 10750/-

| NETWORK | |
|---|---|
| Network Card | 750/- |
| D-Link Broad Band Router (4 Port) | 4900/- |
| D-Link Broad Band Router (4 Port) Wireless | 5900/- |
| D-Link ADSL2 + DSL 2540U Router (4 Port) | 5900/- |
| D-Link ADSL2 + DSL 2540U Router (4 Port) Wireless | 8300/- |
| D-Link Wireless USB Adapter | 3750/- |
| D-Link Network Switch (8 Port) | 2500/- |
| D-Link Network Switch (16 Port) | 4500/- |
| TP-Link ADSL Single Port | 4200/- |
| Modem ADSL USB Single Port | 4500/- |
| ADSL Splitter | 200/- |
| **TV CARD** | |
| TV Card Internal | 2700/- |
| TV Combo (GADMEI) | 2800/- |
| TV Combo LCD (GADMEI) | 4750/- |
| Asus TV Card P 7131 | 4600/- |

| ACCESSORIES | | | |
|---|---|---|---|
| Head Phone | 400/- | Modem 56 K | 550/- |
| Head Phone (Wireless) | 950/- | Power Supply (400 W) | 1200/- |
| Bluetooth | 400/- | Laptop Bag | 1100/- |
| Card Reader | 350/- | Laptop Cool Pad | 1250/- |
| Optical Mouse | 275/- | UPS Battery 12V | 1250/- |
| | | Power Supply 500W | 1300/- |

PRASHERA 0777 49 00 76

* Warranty Value 1-3 years * Stock Available

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk (ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


# தகவல் தொழில் நுட்ப ஆளணி மேம்பாட்டிற்கான புதிய செயற்திட்டம்

தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் பங்களிப்பினை வழங்கி வரும் மைக்ரோசொப்ற், சண்மைக்ரோ சிஸ்ரம், சிஸ்கோ போன்ற நிறுவனங்கள் தகுதி வாய்ந்த ஆளணியின் தேவை கருதி கற்கை நெறிகளையும் பரீட்சைகளையும் நாடத்தி அங்கத்துவச் சான்றிதழ்களை வழங்கிவருகின்றன. சர்வதேச தொழிற் சந்தையில் தகவல் தொழில் நுட்பத் துறையில் மேற்குறித்த தகைமை உடையோரே உயர் .தொழில்களில் பணிக்கமர்த்தப்படுகின்றனர்.

இக்கற்கை நெறிகள் மூலம் யாழ் மாணவர்களும் பயனுற வேண்டும் என்ற நோக்கில் இல. 324 பலாலி வீதியில் அமைந்துள்ள எம்.சி.எஸ்.(MCS) கணினி நிறுவனம் தற்போது உலகின் முன்னணி நிறுவனங்களின் வலைப்பின்னலுடன் இணைந்துள்ளது. இதனால் எமது பிரதேச மாணவர்களும் நேரடியாக மைக்ரோசொப்ற் (Microsoft), சண்மைக்ரோ சிஸ்ரம் (Sun Micro System), டெல்(DELL), எச்பி(HP), ஓராகிள்(Oragle), ஐபிஎம்(IBM), ஐசிடிஎல்(ICDL) மற்றும் சீமா(CIMA) நிறுவனங்களின் கற்கை நெறியினை இங்கு பயில்வதுடன் மேற்படி நிறுவனங்களின் யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையமாகவும் எம்.சி.எஸ்(MCS) நிறுவனம் விளங்குகின்றது.

தற்போது மூன்றாம் நிலை நாடுகளின் தகவல் தொழில்நுட்ப ஆளணியினை மேம்படுத்தும் செயற் திட்டத்தின் கீழ் எம்.சி.எஸ்(MCS) இனம் காணப்பட்டு, இந்நிறுவனத்தில் மேற்படி நிறுவனங்களின் தகவல் தொழில் நுட்பக்கற்கை நெறியினை பூர்த்தி செய்து அப்பரீட்சைகளில் சித்தியடைவோருக்கு அந் நிறுவனங்களின் பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கவுள்ளது.

வெளிநாடுகளில் மாணவர்கள் அதிகூடிய செலவில் பயிலும் இக்கற்கை நெறியினை குறைந்த செலவில் யாழ் மாணவர்களும் பயின்று சிறந்த தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களாவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.




**C.F.DINESH**
**MICROSOFT SYSTEMS ENGINEER**
**Doha International Airport**

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமையால் எதிர்காலம் இருண்ட நிலையில் இருந்த நான் எம்.சி.எஸ் நிறுவனத்தில் மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் கணினிப்பொறியியலாளர் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. குடும்பச்சூழல் காரணமாக மத்திய கிழக்கு நாடொன்றிற்கே நான் வரமுடிந்தது. என்னுடன் டோகா வந்திருந்த ஏனையோர் உடற்பழுவான வேலைகளை குறைந்த சம்பளத்தில் செய்யும் போது எனக்கு சிறந்ததொரு தொழிலை பெற்றுக் கொள்ள மேற்படி கற்கைநெறி உதவியாக இருந்தது. இவ்அரிய சந்தர்ப்பத்தை பெற்றுத்தந்த எம்.சி.எஸ்(MCS) கணினி நிறுவனத்திற்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

வெளிநாடு வரவிரும்பும் ஏனையோரும் மைக்ரோசொப்ற் கணினிப்பொறியாலாளர் கற்கைநெறியை பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ் கணிணி நிறுவனத்தில் பயின்று மைக்ரோசொப்ற் அதிபர் பில்கேற்ஸ் அவர்களின் சான்றிதழைப்பெற்றுக்கொள்வது கௌரவமான தொழில் ஒன்றைப்பெறுவதற்கான உத்தரவாதமாகும்.

-யாழ். மாணவர்களுக்காக டோகாவிலிருந்து தினேஸ்-


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.